# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 04 வெள்ளிக்கிழமை (16-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:81


# புலிகள் விவகாரம் குறித்து மட்டுமே பிரிட்டனின் மீது பல தரப்பு அழுத்தம்!

## ஏனைய அமைப்புகள் தொடர்பாக நெருக்குதல் ஏதும் இல்லையாம்

லண்டன்,பெப்ரவரி 16

**பல நாடுகளிலும் இயங்கும் - பயங்கரவாத அமைப்புகள் என்று கருதப்படும் - பல அமைப்புகளை, புதிதாக நடைமுறைக்கு வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட இயக்கங்களாக அறிவிப்பதற்கு பிரிட்டன் ஆலோசித்து வருகின்றபோதும், ஓர் இயக்கத்தைத் தடை செய்யக்கூடாது என்ற பலமுனை - பல தரப்பு - அழுத்தம் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மட்டுமே பிரிட்டன் மீது தொடுக்கப்பட்டிருப்பதாகப் பிரிட்டிஷ் அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.**

**ஏனைய அமைப்புகள் எது தொடர்பாகவும் இத்தகைய நெருக்குதல்கள் கொடுக்கப்படவில்லை என்றும் அவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.**

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மட்டும் இவ்வளவு அழுத்தமும் நெருக்குதலும் கொடுக்கப்படுவது, அந்த இயக்கம் பயங்கரவாத அமைப்பு என்பதிலும் பார்க்க ஓர் அரசியல் இயக்கம் என்பதை ஓரளவு தெளிவுபடுத்துவதாகவும் அவர் சொன்னார்.

லண்டனில் உள்ள தனியார் வானொலி நிலையம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனைத் தொடர்ந்து பல நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும்!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்

கொழும்பு,பெப்.16

"விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பிரிட்டன் தடைசெய்யும் என்று தகவல்கள் கிடைத்துள்ளன. அதைத் தொடர்ந்து மற்றும் பல நாடுகளும் அந்த அமைப்பைத் தடைசெய்யவிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.ரி.என். தொலைக்காட்சியில் நேற்றிரவு பொதுமக்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக இன்னமும் முடிவு இல்லை. எம்முடன் பேச்சு நடத்தப் புலிகள் தயாராக வந்தாலும் உலக நாடுகள் அந்த அமைப்பைத் தடைசெய்யலாம். அது பேச்சுக்களைப் பாதிக்காது

அமெரிக்கா, இந்தியா, மலேஷியா போன்ற நாடுகள் ஏற்கனவே புலிகளைத் தடை செய்துவிட்டன. தற்சமயம் பிரிட்டனும் தடைசெய்யப் போகின்றது. அதைத் தொடர்ந்து மேலும் பல நாடுகள் அந்த அமைப்பைத் தடைசெய்யவிருக்கின்றன.

இதனால் அவர்கள் பெரும் கஷ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் பல்கலை மாணவர் பிரிட்டனுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,பெப்.16

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக போராடி நிற்கும் விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசு தடை செய்யும் பட்சத்தில் தற்சமயம் உருவாகி வரும் சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலை முற்றாகக் குழம்பும் அபாயம் ஏற்படும். எனவே விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டாம்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கு நேற்று அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## கையொப்ப வேட்டையில் இன்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்

யாழ்ப்பாணம், பெப்.16

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டாம் என்று பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுக்கும் மகஜரில் கையொப்பம் பெறும் வேட்டையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஈடுபடவிருக்கின்றனர்.

குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களிடம் கையொப்பம் பெற ஏற்பாடாகியுள்ளது.

பாடசாலைகள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு குழுக்கள் குழுகளாகச் சென்று இந்தப் பணியில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுவர்.

பொதுமக்களின் சுயவிருப்பத்துடன் கையொப்பம் பெறப்படும் என்று பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதேசமயம் -

பல்கலைக்கழக வளாகத்திலும் கையொப்பம் பெறுவதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக வாசலில் பல்கலைக்கழக மாணவர்கள். விசேட பீடம் ஒன்றை அமைத்துள்ளனர்.

விரும்பியவர்கள் அங்கு கையொப்பம் இடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-6-சி)

## கைதடியில் மீளக் குடியமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.16

கைதடி மத்தி, கைதடி கிழக்கு, கைதடி தெற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நேற்று கைதடிப் பகுதியில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் தொடக்கம் கைதடி மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## வீரப்பனின் சகா கைது

தமிழர் விடுதலைப் படையின் தலைவரும் சந்தனக் கடத்தல் வீரப்பனின் நெருங்கிய சகாவுமான மாறன் என்பவரை காட்டில் வைத்து அதிரடிப் படையினர் கடந்த புதனன்று கைது செய்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது. (உ-1பி)

### சமாதானம் வேண்டி

## கத்தோலிக்க தேவாலயங்களில் நாளை மாலை மணி ஒலிக்கும்

யாழ்ப்பாணம்,பெப்.16

நாட்டின் சமாதானத்தை வலியுறுத்தி இடம்பெறவுள்ள மடுமாதா பவனியை முன்னிட்டு நாட்டில் உள்ள சகல கத்தோலிக்கத் தேவாலயங்களிலும் நாளை பிற்பகல் 5.55 மணிக்கு ஆலய மணிகளை ஒலிக்கவும் நற்கருணை ஆண்டவருக்கு முன்பாக திருமணித்தியால வழிபாடுகளில் ஈடுபடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து நான்கு ஞாயிறு வாரங்களுக்கு திருப்பலி வேளைகளில் சமாதானத்துக்கான விசேட செபம் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் சுவரொட்டிகள், பதாதைகள் மூலமாக சமாதானத்துக்காக செபிக்கும் அழைப்பை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தவும்-

திருசெபமாலை மற்றும் செப முயற்சிகள் ஊடாக சமாதானத்துக்காக விசேட வழிபாடுகள் நடத்தவும் -

கத்தோலிக்க ஆயர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (உ-3)

## அமெ. பிரதித் தூதர் நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.16

இலங்கைக்கான அமெரிக்கப் பிரதித் தூதுவர் லுயீஸ் அம்ஸ்லாம் தலைமையிலான குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

பிரதித் தூதுவருடன் அமெரிக்கத் தூதரக உதவிப் பணிப்பாளர் விக்கி மூர், ஆலோசகர் வில்லியம் வேறா, பாதுகாப்பு ஆலோசகர் அல்டோபியஸ், அரசியல் ஆலோசகர் பத்மினி இராஜதுரை ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

நேற்று மாலை 6.30 மணிக்கு வந்துசேர்ந்த இக் குழுவினர் ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பணிமனையில் யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இன்று மாலை கொழும்புக்குத் திரும்பவுள்ள இவர்கள் காலையில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

(உ-5)

### யாழ். நிலைமையைப் பார்வையிட

## இலங்கையின் 14 தூதர்கள் நேற்று வடக்கே வருகை

யாழ்மாவட்டத்தின் நிலைமைகளை நேரில் அறிவதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதுவர்கள் 14 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்த இந்தக் குழுவினருடன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் வந்திருந்தனர்.

யாழ்.செயலகத்துக்கு நேற்று முற்பகல் 11 மணியளவில் விஜயம் செய்த அவர்கள் யாழ்.அரச அதிபர் சண்முகநாதனுடன் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் நகரப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்ட அவர்கள் சேதமடைந்த பொது நூலகத்துக்கும் சென்றனர். (உ-3,5-173)

## சித்திரவதைகள் தொடர்பான விசாரணை பருத்தித்துறையில்!

யாழ்ப்பாணம்,பெப்.16

சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்ய கொழும்பிலிருந்து வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு தனது விசாரணைகளை இன்று பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் நடத்தவுள்ளது.

இந்த விசாரணைகளுக்கு அச்சுவேலி,நெல்லியடி, வல்வெட்டித்துறை, கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த முறைப்பாட்டாளர்களைச் சமுகமளிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைத்து 19 முறைப்பாட்டாளர்கள் விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரவதைகள் தொடர்பான விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் இல்லாத பட்சத்தில், அவர்களின் உறவினர்கள் இந்த விசாரணைகளுக்கு வருகைதர முடியும் என்றும் - இவ்வாறு விசாரணைக்கு வருகை தருவோர் சம்பந்தப்பட்ட நபரின் சித்திர

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உளங்கனிந்த உவகையுடன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அதிபர்

## திரு.கா.சிவநேசன் அவர்கள்

**இலங்கை அதிபர் தரம் II** இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு எமது ஆசிரியர் குழாமும் மாணவச் செல்வங்களும் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/துணவி அ.மி.த.க.பாடசாலை, வட்டுக்கோட்டை.
(84226)

# கண்ணீர் அஞ்சலி

எமது அச்சக ஊழியர்

**ரமேஷ்குமாரின்**

அன்புக்கும் பாசத்துக்கும் உரிய
அன்னையார்

**திருமதி மகேஸ்வரி கந்தசாமி**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் வருத்தம் அடைகின்றோம். ரமேஷ்குமாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அமரராகிவிட்ட

அன்னை

## திருமதி மகேஸ்வரி கந்தசாமி

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகிறோம். அவரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்,
திருவள்ளுவர் ஓவ் (F) செற் பிறின்டிங்,
நல்லூர்.
(84233)

# குமாரதுங்க நினைவு நிகழ்வு

விஜய குமாரதுங்கவின் 13 ஆவது நினைவு தினத்தை ஒட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ்.ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

கட்சியின் யாழ்கிளை உப தலைவர் இ.சௌந்தரநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் பலர் அஞ்சலியுரை நிகழ்த்துவர். (உ-3)

## வில்லுப்பாட்டு

நகைச்சுவை கலந்து
நயத்துடன் தருபவர்கள்
நாச்சிமார் கோவிலடி

**ஸ்ரீதர்**
**வில்லிசைக் குழுவினர்**

நாடுங்கள்:- "கலைமணி"
சைவப்புலவர்
**இராசையா ஸ்ரீதரன்**
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம். (84240)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
பிரபுதேவா-சரத்குமார்
ஜெயாசீல் நடித்த
**பெண்ணின் மனதைத்தொட்டு**
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15278)

**ராஜா**
யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
கார்த்திக்,
திவ்யாஉன்னி,
ரஞ்சித், மந்த்ரா
மற்றும் பலர் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**கண்ணன் வருவான்**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15311)


# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## அனைத்துலகப்
# பெண்கள் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு நடத்தும் அனைத்துலகப் பெண்கள் தினத்தையொட்டி பின்வரும் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

| போட்டி | விடயம் | நேரம் |
|---|---|---|
| தரம் 10, 11 மாணவிகள் பேச்சுப் போட்டி | மகளிர் தலைமைத்துவம் | 5 - 6 நிமிடம் |
| தரம் 12, 13 மாணவிகள் | எமது சமூக வளர்ச்சியில் பெண்களின் பங்கு | 5 - 6 நிமிடம் |
| மகளிர் அங்கத்தவர் கவிதைப் போட்டி | கூட்டுறவு, மகளிர் தலைமைத்துவம் பிரதேச அபிவிருத்தி தொடர்பானதாக இருத்தல் வேண்டும் | 3 நிமிடம் |

*கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலை ஆசிரியர், சிறுவர்களுக்கான போட்டி விவரங்கள் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.*

***விண்ணப்ப முடிவு திகதி 28.02.2001***

***விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:***

மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆம் மாடி,
12, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

அ. மாணவிகள் பாடசாலை அதிபரின் சிபார்சுடன், மகளிர் அங்கத்தவர்கள் சங்கத் தலைவர் அல்லது பொது முகாமையாளரின் சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஆ. பாடசாலை மாணவிகளுக்கான பேச்சுப் போட்டிகள் 03.03.2001 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும், கவிதைப் போட்டி 04.03.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் இல.14, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள சபையின் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டாது.

- மாவட்டச் செயலாளர்.
(C/15334)

# யாழ்.ஆயரின் விசேட அழைப்பு

**இலங்கையின் சமாதானத்தை வலியுறுத்தி மடு அன்னையின் திரு சொரூபம் தென்னிலங்கையில் பவனியாக எடுத்து வரப்படுகின்ற தேசிய நிகழ்வில் நாமும் கலந்துகொள்ளும் முகமாக**

- *17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் சிற்றாலயங்களிலும் மணிகளை ஒலித்து சமாதானத்துக்காகச் செபியுங்கள்.*
- *விசேட நற்கருணை வழிபாடுகளை ஒழுங்குசெய்து நீதியோடு கூடிய நிரந்தர சமாதானம் எம் மண்ணில் நிலைக்க செபியுங்கள்.*
- *18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தொடர்ந்து 4 கிழமைகளுக்கு விசேட சமாதான வழிபாடுகளையும் ஒன்றுகூடல்களையும் அமைத்து மடு அன்னை பவனி வருகின்ற இத் தேசிய நிகழ்வில் கலந்துகொள்வோம்.*

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ்.ஆயர்.
(C/15335)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சடாச்சரலிங்கம்

(முன்னாள் **Richard Peries** ஊழியர்)

ஏழாலை தெற்கு, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஐக்கிய அமெரிக்காவில் தற்போது வசித்து வந்தவருமான இராமலிங்கம் சடாச்சரலிங்கம் அவர்கள் 13.02.2001 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வே.இராமலிங்கம் (**Retired DFO Forest Department**) தம்பதிகளின் அன்பு மகனும் சூராவத்தையைச் சேர்ந்த திரு.திருமதி சின்னத்துரையின் மருமகனும் திருமதி செந்தாமரைச்செல்வியின் (இளைப்பாறிய ஆசிரியை - சுன்னாகம் மயிலணி, சைவ மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும் திருமதிகள் வி.ராதா (**B.Sc. - U.S.A.**), சி.வரதா (பொறியியலாளர் - **U.S.A.**), சு.ஜெகதா (வங்கியாளர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருவாளர்கள் **Dr.**விஜயசேகரன் (**U.S.A**), சிவகுமார் (பொறியியலாளர் - **U.S.A.**), சுசீதன் (வங்கியாளர் - கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும் செல்வன் அர்ச்சுனனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஐக்கிய அமெரிக்காவில் (**U.S.A.**) நாளை (17.02.2001) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு (ஐக்கிய அமெரிக்க நேரம்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தகவல்: திருமதி சிவபாக்கியம் கனகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை)**
**ஏழாலை தெற்கு, சூராவத்தை, சுன்னாகம்.**

*சி.வரதா (**U.S.A.**)*
***T.P. No.*** *- 001-732-6982426*
(84228)

## தம்பு முருகேசபிள்ளை

விடத்தற்பளையைப் பிறந்த இடமாகவும் உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு முருகேசபிள்ளை 15.02.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சுவாமிநாதன், கமலாம்பிகை, கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபாசினியின் அன்பு மாமனாரும் வைஸ்ணவனின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2001) வெள்ளிக்கிழமை 2.00 மணிக்கு ஏழாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மு.சுவாமிநாதன் (மகன்)**
**சு.சித்திரன் (மருமகன்)**

தற்காலிக முகவரி:
*கட்டுவிளான்,*
*ஏழாலை மேற்கு, ஏழாலை.*
(84227)

## திருமதி மகேஸ்வரி கந்தசாமி

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தசாமி 14.02.2001 அன்று காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சாந்திக்குமார் மற்றும் ரமேஷ்குமார், சங்கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும் மாணிக்கம் சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று 15.02.2001 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*121/A, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

தகவல்:
**செ.வீரசிங்கம் (மைத்துனர்)**
(84231)

## பொன்னம்பலம் நாகராசா

(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - மகாவலி அ.சபை)

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நாகராசா நேற்று (15.02.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி ஞானேஸ்வரி நாகராசா (ஆசிரியை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)வின் பாசமிகு கணவரும் மகேஸ்வரி (கொழும்பு), ராதா (இத்தாலி), சிவராசா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரன் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்), லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராமச்சந்திரன், தவராசா, லதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் நவரட்ணம் (விமலாஸ் - சாவகச்சேரி), சமூகலிங்கம் (ஆசிரியர் - வேரவில் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகலனும் சுகந்தன், வித்தியா, லதா, தயா, சாயினி, குருபரன் ஆகியோரின் சித்தப்பாவும் சுபேந்தர், சுகுராம், சுபி, சாலினி, பமீலா, அகிலா, அகிலன், அகிலதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2001) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி, சங்கானையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருமதி நா.ஞானேஸ்வரி (மனைவி)**
**விமலாஸ் கா.நவரட்ணம் (சகலன்)**
*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.*

நிரந்தர முகவரி:
*தபாற்கந்தோர் வீதி,*
*சாவகச்சேரி.*
(84232)

# உதயன்

## முக்கிய முடிவு...

இன்று இலங்கை அரசியலில் ஆகப் பிந்திய விவகாரமாகப் பேசப்படுவது, எல்லோரும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் எதிர்பார்ப்பது தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தடை செய்யுமா இல்லையா என்பதனையே.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர்களின் உரிமைகளுக்காக — அரசியல் அபிலாசைகளுக்காக — சலிப்பின்றி உறுதியுடன் போராடும் அமைப்பு. தமிழர்களை ஆயுதப் போராட்டத்துக்கு நிர்ப்பந்தித்தவர்கள் சிங்களத் தலைவர்களே. ஆயுதப் போராட்டம் ஒரு தாக்கத்தைக் கொண்டு வந்ததாலேயே, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற உந்துதல் இப்போதைய தென்னிலங்கைத் தலைவர்களிடம் உண்டாகியது. —

அதன் பிரதிபலனாக அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்வந்துள்ளது — முனைந்துள்ளது. —

இந்த வேளையில், இலங்கையை 53 வருடங்களுக்கு முன்னர் ஆட்சிசெய்த பிரிட்டன், விடுதலைப் புலிகளைத் தடை செய்தால், தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டியதைக் கொடுக்காமல், சிங்களப் பேரினவாதம் தான் விரும்பியதைக் கிள்ளித் தெளிக்க அந்த நாடும் துணை போவதாக முடியும். —

ஆகையால், பிரிட்டிஷ் அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்யக்கூடாது — என்பது தமிழ் மக்களின் விருப்பமாக உள்ளது.

ஆனால் சிங்களப் பேரினவாதமோ, பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று விரும்புகிறது; நேர்த்தியும் வைத்திருக்கும்.

தடையை மூலமாக வைத்து இலங்கை விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை நீக்காதிருக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம்; செல்வாக்கைச் செலுத்தலாம் —

அவ்வாறு செய்விப்பதன் மூலம் அரசியல் — சமாதான — பேச்சுக்கள் நடைபெறாமல் தடுக்கலாம் —

தமிழர்களின் உரிமைகளை வழங்காது, இப்போதுள்ளது போன்ற சலுகைகளையே தொடர்ந்து அவர்களை இரண்டாந் தரப் பிரஜைகளாகவே அடக்கி ஆளலாம் — என்பது சிங்களப் பேரினவாதத்தின் வேணவாவாக உள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய முக்கிய நாடுகளால் தடைசெய்யப்பட்ட அமைப்பாக — வாலறுந்த பட்டமாக — வந்த பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேசினால், தானே மேலோங்கி நின்று முடிவுகளைத் திணிக்க வசதியாக இருக்கும் என அரசு நம்புகிறது — எதிர்பார்க்கிறது.

இத்தகைய முத்தரப்பு விருப்பங்களிலும் யாருடையது நிறைவேறப் போகிறதோ! எதிர்வரும் திங்கட்கிழமை — பத்தொன்பதாம் திகதி — இது குறித்த பிரிட்டிஷ் அரசின் உத்தியோகபூர்வ முடிவு தெரிய வந்து விடும்!

அதற்கு முன்னர், புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட மாட்டாது; தடை விதிப்பு ஒத்தி வைக்கப்படும்; தடைசெய்யப்பட்டாலும் அரசு — புலிகளின் பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் வாபஸ் பெறப்படும்; தடை செய்யப்பட்டே தீரும் — என்ற ஊகங்கள் உலவுகின்றன.

எதுவானாலும் இலங்கை அரசியலின் — இனப்பிரச்சினைத் தீர்வின் — சமாதான முயற்சிகளின் — தலைவிதியை நிர்ணயிக்கும் முடிவாக அது அமையப் போகிறது.

# யாழ். போதனாவைத்தியசாலையில் 32 வகை மருந்துக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ் போதனா ஆஸ்பத்திரியில் தற்போது 32 வகையான மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிமுக்கிய மருந்துகளான நிரோவியன் (Neurovion) ஊசி மருந்து, டொம்பிறிடோன் (Dompridon), டயனில் (Dionil), அல்டோமற் (Aldomat), மெற்போமின் (Metphomin), இன்சுலின் (Insulin), ஆட்டேன் (Artane), வெரப்பாமில் (Verapamil), மெலாறில் (Mellaril), லிபிறியம் (Librium), நெற்போமில் (Netformil) போன்ற மாத்திரைகள், விற்றமின் 'சி', விற்றமின் 'ஏ' அன் டி' (A&D) ஆகியவை உட்பட 32 முக்கிய மருந்து வகைகள் முற்றாக இல்லை என்று தெரியவருகின்றது.

அதிதீவிர சிகிச்சையின் போது முக்கியமானதான 'ஒட்சிச'னுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிகின்றது.

இதனால் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உயிராபத்து ஏற்படும் நிலையும் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்களுக்கு மருந்துகளை வெளியில் வாங்குமாறு வைத்தியசாலை வார்ட்டுகளிலும், கிளினிக்குகளிலும் வெளி நோயாளர் பிரிவிலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

ஆஸ்பத்திரியில் எழுதிக் கொடுக்கப்படும் பெறுமதியான மருந்துகளைத் தனியார் கடைகளிலும் பெற முடியாத நிலை இருப்பதாகவும் —

இருக்கும் மருந்துகளையும் அதிகூடிய விலை கொடுத்தே வாங்க வேண்டி இருப்பதாகவும் —

மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## பாடசாலை இடமாற்றம்

தென்மராட்சி, பெப். 16

கைதடி, நாவற்குழி, அரச தமிழ்க் கலவன் பாடசாலை எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பருத்தித்துறை தும்பளையில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் தரம் 1 தொடக்கம் 5 வரை இயங்குமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ-117)

## தொலைக்கல்விப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் 1999 — 2002 ஆம் ஆண்டிற்கான தொலைக் கல்விப் பயிற்சிநெறியில் பங்குபற்றுவோர்க்கு பகுதி 1 இற்கான இறுதிப் பரீட்சைக்குரிய சித்திரம், சங்கீதம், நடனம், உடற்கல்வி ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.30 மணி தொடக்கம் நிலையத்தில் நடைபெறும்.

பயிற்சி பெறும் ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தேவையான சகல உபகரணங்களுடன் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் ச. சரவணமுத்து அறிவித்துள்ளார். (உ)

## ஆசிரியர் சங்கப் பணிமனை இயங்குகிறது

யாழ்ப்பாணம், பெப். 16

நல்லூர் பருத்தித்துறை வீதி, 442 இலக்கத்தில் உள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரையும் புதன் கிழமைகளில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரையும் அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடு செய்து தீர்வு காண்பதற்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

சம்பந்தப்பட்டோர் எழுத்து மூலம் பிரச்சினைகளைச் சமர்ப்பிக்கலாம் எனவும் —

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (உ)

## நாளை

மாசி 5

சனிக்கிழமை

திதி: தசமி பின் இரவு 4.34 வரை

நட்சத்திரம்: கேட்டை மாலை 6.01 வரை.

ஜபநேரம்: 3.33 — 5.03

ராகுகாலம்: 9.33—11.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சைவ பரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் பதக்கம் பெறும் மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 16

புண்ணிய நாச்சியம்மையார் நினைவுதினம் சார்பாக யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் மற்றும் பாடசாலை விவரம் முறையே வருமாறு:-

### கீழ்ப்பிரிவு

தேவராஜா விதுர்ஷன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ரஜிந்திரன் சாரங்கி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தனபாலன் சிவாஜினி (யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

### மத்தியபிரிவு

குலேந்திரன் ஜெகதீசன் (யூனியன் கல்லூரி), ஜெ. வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), தெ. பவனுஜா (வேம்படி மகளிர்).

### மேற் பிரிவு

ஸ்ரீ மகள் ஸ்ரீரங்கநாதன் (வேம்படி மகளிர்), குமாரவடிவேல் குருபரன் (யாழ். இந்து), நிஷா [illegible]ர்மலிங்கம் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

மேற்படி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கம் சூட்டும் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் மாணவர்களுக்கு பதக்கங்களை அணிவிப்பார். சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ. சந்தசாமி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (உ-7)

## ஆசிரியர் நூலகர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைகள்

### 23 ஆம் திகதி முதல் நடைபெறும்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ் மாவட்டத்திலிருந்து ஆசிரியர் நூலகர் பதவிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், பட்டச் சான்றிதழ், சேவைக் காலத்தை உறுதிப்படுத்தி பாடசாலை அதிபரால் வழங்கப்பட்ட சான்றிதழ், கணனி தொடர்பாக பெறப்பட்டுள்ள சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், மற்றும் க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் பெற்ற சித்தி தொடர்பான சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள யாழ். கல்வி வலய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் 23 ஆம் திகதி யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும்.

24 ஆம் திகதி தீவக பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் யாழ். வலயக் கல்விப் பணிமனையிலும் 25 ஆம் திகதி வடமராட்சி மற்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பரீட்சார்த்திகளுக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையிலும் 26 ஆம் திகதி வலிகாமம் வலய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைகள் யாழ். வலயக் கல்விப் பணிமனையிலும் நடைபெறும் என்று வடக்கு — கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (உ-6)

## ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை ஆசிரியர் சேவையில் முதலாம் வகுப்புக்கான பதவி உயர்வில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் வி. கனேஸ்வரன் கேட்டுள்ளார். (க)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் முதன்மை நிலை இரண்டு, மூன்றுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபர் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி சௌந்தராம்பிகை திருஞானசம்பந்தபிள்ளை பரிசில்களை வழங்குவார். (3)

★ ★ ★

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஈ. பி. டி. பி. அச்சுவேலி பிரதேசப் பொறுப்பாளர் ரவியும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர் கே. குணராசா, தொழிலதிபர் எஸ். நடராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (க-11)

★ ★ ★

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் பங்குபற்றுவர். (-3-90)

★ ★ ★

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள பிளெக் அன்ட் வைற் மைதானத்தில் அதிபர் சு. சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்விமுகாமைத்துவ உதவிக்கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவமும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் ச. தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். [க]

★ ★ ★

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க. செல்வக்குமரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வலிகாமம் தெற்கு பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். (உ-28-152)

### உதயவாக்கு

சிரிப்பு ஒன்று தான் மனிதனை மிருகத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மாயவன் பக்த கோடிகளின் கவனத்துக்கு

எமது ஆலயத்தில் பல திருப்பணி வேலைகள் நடைபெறுவது பக்தர்களாகிய தாங்கள் யாவரும் அறிந்த விடயமாகும். இவற்றைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திச் சில தனி நபர்களால் திருப்பணி நிதிக்காகவும், விசேட யாகங்களுக்காகவும் நிதி சேகரிப்பதாக எம்மால் அறிய முடிகிறது.

எனவே எமது ஆலயக் கருமபீடத்தில் மட்டும் நிதியைச் செலுத்துமாறு பணிவன்புடன் பக்தகோடிகளை வேண்டிக்கொள்கின்றோம்.

தலைவர்,
அறங்காவற் குழு.

(84214)

## நன்றி நவில்கின்றோம்

எமது பாடசாலையின் கட்டடத் திருத்த வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து உதவிய வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளருமாகிய

**கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்,
யாழ். மாவட்டக் கட்சி அமைப்பாளர்
**ஸ்ரீகன்** அவர்களுக்கும்
எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்,
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.
(84211)

தெல்லிப்பழை

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் 19-ம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

18-02-2001 ஞாயிற்றுக்கிழமை

அன்புடையீர்,
வணக்கம்
மேற்படி விழா துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவாகும். இவ்விழாவுக்கு அன்பர்கள், நலன்விரும்பிகள், ஆன்மீகவாதிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபம்

காலம்: 18 02-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

தலைமை: சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J P
(தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி]

பரிசில் வழங்கல்: திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன்
(தலைவர், வலி. வடக்கு பிரதேச சபை)

நிகழ்ச்சிநிரல்
காலை 9-00 மணி: தேவாரம்
காலை 9-05 மணி: வரவேற்புரை
காலை 9-15 மணி: ஆசியுரை
ஆண்டறிக்கை
தலைமை உரை; சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
காலை 9.30 மணி: சிறப்புரை
பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் [நந்தி]
பரிசில் வழங்கல்; திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன்
நன்றியுரை:
கலைநிகழ்ச்சிகள்: துர்க்காபுரம் மகளிர் இல்லம்
▼ சிறுவர் பாட்டு ▼ சுளகு நடனம்
▼ நாடகம் என்பன இடம்பெறும்.
இல்லக்கீதம்;
நண்பகல் 12.30 மணி; மதிய உணவு

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P
தலைவர்

அ. சண்முகநாதன்
தனாதிகாரி

மலைமகள் இராமநாதன்
நா. தவநாதன்
செயலாளர்கள்

துர்க்காபுரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை.
[சி/15326]

## பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 16
வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய விண்ணப்பித்தோரில் இம்மாதம் 15 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**
(158671ஏ), (158671பி),
(158671சி), (158671டி),
(175736ஏ), (175736பி),
(181459ஏ), (181459பி),
(181459சி), (181668ஏ),
(182663ஏ), (182797ஏ),
(183040ஏ), (183040பி),

**கரவெட்டி**
(177863ஏ),

**ஊர்காவற்றுறை**
(14521ஏ), (14521பி),
(14521சி), (14521டி),
(14521ஈ), (14522ஏ),
(14522பி), (14522சி),
(14522டி),
(14523ஏ), (14526ஏ),
(14554ஏ), (14574ஏ),
(14591ஏ), (14591பி),
(14591சி), (14591டி),
14631ஏ), (14631பி),
(14633ஏ), (14640ஏ),
(16440பி), (14647ஏ),
(14647பி), (14665ஏ),
(14667ஏ), (14668ஏ),
(14668பி), (14681ஏ),
(14682ஏ), (14684ஏ),
(14684பி], [14684சி],
[14684டி], [14684ஈ[,
[14684எவ்], [14685ஏ],
[14685பி].

**நல்லூர்**
[179387ஏ], [179387பி],
[181626ஏ], [182678ஏ],
[182745ஏ], [182793ஏ],
[182793பி], [182793சி],
[182838ஏ], [182838பி],
[182847ஏ], [182055ஏ],
[182855பி], [182856ஏ].
[183272ஏ].

**பருத்தித்துறை**
(182362ஏ), (182362பி),
(182362சி), (183589ஏ),
(183589பி).

**சண்டிலிப்பாய்**
(160816ஏ), (160816பி),
(160817ஏ).

**தெல்லிப்பழை**
(176586ஏ), (176586பி),
(176596சி), (179452ஏ),
(181559ஏ), (181607ஏ),
(181666ஏ), |(181666பி),

**உடுவில்**
(146974ஏ), (172757ஏ),
(173124ஏ), (179033ஏ),
(179033பி), (179075ஏ),
(179075பி), (179075சி),
(179262ஏ), (179444ஏ)
(181401ஏ), (181401பி),
(181401சி), (181413ஏ),
(181413பி), (181413சி),
(181413டி), (181567ஏ),
(181612ஏ), (181612பி),
(181612சி), (181612டி),
(182686ஏ), (182686பி),
(182686சி), (182720ஏ),
(182755ஏ), (182765ஏ),
(182852ஏ).

**வேலணை**
(14597ஏ), (14597பி),
(14605ஏ), (14605பி),
(14605சி), (14642ஏ),
(14655ஏ), (14655பி),
(14655சி), (14655டி),
(க—6)

## யாழ். நகரில்

பெப்ரவரி – 18
(நாளை மறுதினம்)
அளவையியல்
V. ரகுமார்
BA (GEN-AR)
1 மணி – 3 மணி வரை
NEWTON
242, STANLY RD.
3 மணி - 5 மணி வரை
BRIGHTMAN
BROWN RD.
மேலதிக வகுப்புகளுக்கு சகாய கட்டணம்.
(84205)

## ஓவியப் போட்டியும் கண்காட்சியும்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் சிறந்த முறையில் ஓவியப் போட்டியை நடத்தவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்.

**தலைப்பு:-**
1. பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையான சமூகப் பின்னணி.
2. பெண்கள் எதிர் கொள்ளும் வன்முறைகள்.
3. வீட்டு வன்முறைகள்
4. பெண்கள் முன்னேற்றம்
5. பெண் அடக்கு முறை வடிவங்கள்.

போட்டி முடிவு திகதி:- 25-02-2001

அனுப்ப வேண்டிய முகவரி:-
மகளிர் அபிவிருத்தி நிலையம்
07, கே. கே. எஸ் வீதி, வண்ணார்பண்ணை.

மேலதிக விவரங்களுக்கு மேற் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.
(84223)

## பாராட்டுவிழா அழைப்பு

★★★★★★★★★★

பணியுவந்து பாராட்டப்படுவோர்:-
''சிவாகம கிரியா தத்வநிதி'',
''கிரியா சிரோன்மணி''
**சிவப்பிரம்மஸ்ரீ ராம். கெங்காதரக் குருக்கள்**
(சாரதாபீடம் - அல்லையம்பதி)

காலம்: இன்று 16.02-2001 வெள்ளி மாலை 6. 30 மணி
இடம்: அல்லைடம்பதி சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்
பிரதம விருந்தினர்: செ. சிறீனிவாசன் (கரவெட்டி பிரதேச செயலர்)

சற்குருவின் பணியுவந்து புகழ் பரவ ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– விழா அமைப்புக் குழு.

சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்,
அல்லையம்பதி.

விழா சிறப்புற வாழ்த்துவோர்;
**மயூரா தொலைத் தொடர்பகம்**
**மயூரா பல்பொருள் அங்காடி**
சாவகச்சேரிவீதி, அல்லையம்பதி, துன்னாலை.
(84206)

## நன்றி கூறுகின்றோம்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வடக்கெல்லை மதிலைப் புனரமைத்துப் பூரணப்படுத்த 1,00,000/- ஒதுக்கியும் அச்செயற்பாடு நிறைவேற பூரண ஒத்துழைப்பும் தந்துதவிய

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து சமய கலாசார அமைச்சரான மதிப்பிற்குரிய
**கே. என். டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்,
ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பிரதான அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான
**திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்)** அவர்களுக்கும்,
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. தவராசா** அவர்களுக்கும்,
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. சிவதாசன்** அவர்களுக்கும்,
ஈ பி.டி. பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவருமான
**திரு. க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)** அவர்களுக்கும்,
யாழ். மாநகர சபை உறுப்பினர்
**திரு. மா. கனகரட்ணம்** அவர்களுக்கும்,
யாழ்ப்பாண அமைப்பாளர்
**திரு. து. இளங்கோ (ஸ்ரீகன்)** அவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/கந்தர்மடம், சைவப்பிரகாச வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
(84209)

# தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான நிதி குறைப்பால் மாணவர்கள் பெரும் பாதிப்பு

## கற்கை நெறிகளை இடைநிறுத்த வேண்டிய நிலை

கொழும்பு,பெப்.16

தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கென ஒதுக்கப்படும் நிதி, வருடத்துக்கு வருடம் குறைக்கப்பட்டு வருவதனால் தொழில் நுட்பக் கல்லூரிகள் சீராக இயங்க முடியாத நிலைகுத் தள்ளப்பட்டுள்ளன. அதே சமயம் மாணவர்களுக்கான கற்கை நெறிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது குறித்து தொழில் நுட்பக் கல்லூரிகளின் அதிபர்கள் பலர் கருத்துத் தெரிவிக்கையில் -

தொழில் நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் இந்த வருடமும் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான நிதியைக் குறைத்து ஒதுக்கவுள்ளதாக அறிகின்றோம். தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கென திறைசேரி ஒதுக்கிய நிதி குறைவாக இருப்பதனாலேயே தாமும் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு நிதியைக் குறைத்து வழங்க வேண்டியிருப்பதாக தொழில நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் கூறுகிறது.

இவற்றைக் காரணம் காட்டி இந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுகளைத தயாரித்து ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் எவ்வளவு நிதி தேவைபபடுகின்றது என்பதை முன்கூட்டியே தமக்கு அனுப்பி வைக்குமாறு வலயப் பணிப்பாளர்கள் அதிபர்களுக்கு அறிவித்துள்ளனர்.

கல்வித்துறைக்குப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பல கற்கை நெறிகளை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் தொழில் நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாற்றும் விரிவுரையாளர்களுக்கு சம்பளங்களை உரிய நேரத்தில் வழங்க முடியாமல் இருக்கிறது.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் போதும் அவர்களுக்கான புதிய பிரிவுகளை ஆரம்பிக்க முடியாமல் திண்டாடுகின்றோம்.

மாணவர்களுக்கு போதிய இடவசதிகள் இல்லாமல் வகுப்புக்களை நடத்த முடியாமல் இருக்கிறது. தேவையான கற்பித்தல் சாதனங்கள் எமக்கு இல்லை. கம்பியூட்டர்கள் கூட எமது கல்லூரிகளுக்கு போதுமானதாக இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு வேலை வாய்ப்பின்றி வீடுகளில் இருக்கும் இளைஞர் யுவதிகளும் தொழிலில் மேலதிக அறிவைப் பெறவிரும்பும் இளைஞர் யுவதிகளை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றைக் கவனத்தில் எடுத்து உரிய அதிகாரிகள் இனி மேலாவது தொழில் நுட்பக்கல்லூரிகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு தர முன்வர வேண்டும் என்று எதிர்பாக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக யாழ். தொழில்நுட்பக்கல்லூரி அதிபரிடம் கேட்டபோது -

எமக்கு ஒதுக்கப்படும் நிதி உண்மையிலேயே பற்றாக்குறையாகத் தான் இருக்கின்றது.

கடந்த வருடம் எமது தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வந்த 4கற்கை நெறிகள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கும் நிதிப் பிரச்சினையே காரணமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

தொழில் செய்பவர்களின் வசதி கருதி மாலை நேரங்களில் நடைபெற்றுவந்த மோட்டார் வாகனத்துக்கான மின்இணைப்பு, வானொலி பேணல், கட்டடங்களுக்கான மின் இணைப்பு ஆகிய கற்கை நெறிகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன.

குழாய் இணைப்பு, மரவேலை, மேசன்தொழில் ஆகிய மூன்று கற்கை நெறிகளும் ஒன்றிணைக்கப்பட்டு கட்டட நிர்மாண தொழில்நுட்பம் என்ற ஒரு வருட கற்கை நெறியாக மாற்றியுள்ளனர்.

இந்த கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இந்த வருடமும் பெருமளவு மாணவர்கள் கற்கை நெறிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பித்தனர். ஆனால் எமக்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் நாம் புதிய பிரிவுகளை ஆரம்பிக்கமுடியாமல் இருக்கிறது.

இதனால் மாணவர்கள் பல் பாதிகப்பட்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது எனத்தெரிவித்தார். (க-6)

### இதுவரை 5 லட்சத்து 35 ஆயிரம் புத்தகங்கள் வந்துசேர்ந்தன

## மேலும் மூன்றரை லட்சம் பாடநூல்கள் யாழ் மாவட்ட மாணவர்களுக்குத் தேவை

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்களில் மேலும் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 482 பாடநூல்கள் எடுத்து வரப்பட வேண்டியுள்ளதாக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கென இரண்டு தடவைகளில் 5 இலட்சத்து 35 ஆயிரத்து 511 பாடநூல்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இன்னும் நாற்பது வீதமான அளவு பாடநூல்கள் தேவைப்படுகின்றன. அவற்றை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடமும் இரண்டு, மூன்று தடவைகளிலேயே இவை எடுத்து வரப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. ஒரே தடவையில் உரிய காலத்தில் பாடநூல்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப் படாததால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்களும் கல்விச் சமூகததைச் சார்ந்தவர்களும் விசனம் தெரிவித்து வருகின்ற போதும் மேற்படி நடவடிக்கை தொடாவது தவிர்க்க முடியாத நிகழ்வாகி விட்டது.

சகல கல்வி வலயங்களாலும் ஆண்டு தோறும் தமது வலயப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடநூல்களின் எண்ணிக்கையை அனுப்பி வைக்கப்படுகின்ற போதும் ஒரே தடவையில் தேவைக்குரிய பாடநூல்கள் வந்து சேர்வதில்லை.

இந்தத் தடவை எடுத்து வரப்பட்ட பாடநூல்கள் அனைத்தும் வலயங்களின் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-10)

### சிறுவன் தப்பினான்

யாழ்ப்பாணம்,பெப்.16

நன்னடதைக்கென யாழ்நீதிமன்றினால் இருபாலையிலுள்ள 'கானான்' சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட சிறுவன் ஒருவன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

திருட்டுச் சம்பவம் ஒன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட சிவலிங்கம் சிறிஸ்கந்தராஜா என்ற சிறுவனைக் கடந்த 7ஆம் திகதி யாழ். நீதிமன்றம் 'கானான்' இல்லத்துக்கு நன்னடதைக்கென அனுப்பியது. அச்சிறுவன் மறுநாள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

இதனையடுத்து அச் சிறுவனைக் கைது செய்யுமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா கோப்பாய் பொலீஸாருக்குப் பிடியாணை பிறப்பித்துள்ளார். (உ-10-ரி)

### மாணவர்கள் காயம்

பாடசாலைக்குச் செல்லும் வழியில் புளியங்காய் பிடுங்க மதிலில் ஏறிய இரு மாணவர்கள் மீது மதில் இடிந்து விழுந்து இடது கால் முறிந்து காயமடைந்தனர்.

உரும்பிராய் கிருஸ்ணன் கோயிலடி முகாம், உரும்பிராயைச் சேர்ந்த சிவராசா சுயிந்தன் (வயது 12), நவரத்தினம் சுயந்தன் (வயது 12) ஆகிய இரு மாணவர்களுமே காயமுற்றனர். (உ-6)

### அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

அச்சுவேலி தென்னிந்திய திருச்சபையினால் நடத்தப்படும் இலவச முன்பள்ளிக்கு ஹியூடெக் ஸ்தாபனத்தினரால் ஒரு தொகைத் தளபாடங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (க)

### கீரிமலைக்குச் செல்ல ரூ.10 பஸ் கட்டணம்

வலி.வடக்கு,பெப்.16

மகா சிவராத்திரியை ஒட்டி கீரிமலை செல்லும் பக்தர்களுக்கான பஸ் கட்டணம் தெல்லிப்பழையில் இருந்து போய்வர பத்து ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு வழி பயணத்துக்குமான சீட்டு (டிக்கெட்) பயணிகள் கீரிமலை செல்லும் போதே வழங்குவது எனவும் திரும்பும் போதும் அதனைக் காட்டி வரமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-86)

## இறைவன் பெயரை பக்தியுடன் உச்சரித்தால் சகல நலனும் கிடைக்கும்

கடவுளிடத்திலே, தொடக்கத்திலே அச்சம் இருக்க வேண்டும்.

ஆண்டவன் அகிலாண்ட நாயகன்; சர்வ வல்லமைகளும உடையவன்; நம்முடைய தலைவன். நாம் மனவாக்குக் காயங்களால் புரியும் குற்றங்குறை குணங்கள் எல்லாவற்றையும் அறிகிறான். ஆகவே கடவுளிடத்தில் ஒவ்வொருவருக்கும் அச்சம் இருக்கவேண்டும்.

ஒரு நூறு ரூபாய் சம்பளம் தருகிற முதலாளியிடம் தொழிலாளிக்கு அச்சம் இருக்கிறது. ஆண்டவன் நம்மிடம் ஒரு பயனும் கருதாமலேயே இந்த உடம்பு, உலகம், கதிர், மதி, கனல், புனல், காற்று ஆகியவற்றைத் தந்துள்ளார். அளவில்லாத ஆற்றலுடைய இறைவன் எங்கே? ஒன்றுக்கும் பற்றாத நாம் எங்கே?

அந்தப் பரமபதியினிடம், பயந்து நடக்கவேண்டும். அதற்கு அப்பால், அன்பு தோன்றும். இறைவனுடைய எல்லையில்லாத கருணையை நினைத்து நினைத்து உள்ளம் உருகி, அன்பு செய்யவேண்டும்.

உலகில் குழந்தைகளுக்குத் தாய் தந்தையரிடம் தொடக்கத்தில் அச்சம் உண்டாகிறது. ஏதாவது நாம் குற்றம் புரிந்தால் அப்பா அடிப்பார், அம்மா தண்டிப்பாள் என்று தான் எண்ணுகின்றன. வயது முதிர்ந்த பின் அம்மா அப்பா அடிப்பார்கள் என்ற அச்சம் ஏற்படுவதில்லை. தாய் தந்தையருக்குமுன் அச்சத்தால் அடங்கியிருந்தவர், இப்போது அன்பினால் அடங்கியிருக்கின்றனர்.

இது போல் உயிர்களாகிய நாம், உயிர்க்கு உயிராகிய பரமபதியிடம் அச்சமும் அன்பும் கொண்டு உய்வு பெறவேண்டும். திருக்கோயில்களில் இரண்டு வகையான உபசாரங்கள் நடைபெறும்; ஒன்று ராஜோபசாரம் இது அச்சத்துடன் புரிவது. மற்றொன்று தேவோபசாரம்; இது அன்புடன் புரிவது.

அச்சம்,அன்பு என்ற இந்த இரண்டும் வடமொழியில் பயபக்தி எனப்படும்.

பயபக்தி ஒருவனுக்கு வந்து, உத்தமமான வழிபாடு புரிவானாயின், அதுவே முக்தியாக விளைந்துவிடும்.

நாள் செல்லச் செல்ல, காயே கனியாவது போல், பக்தியே முக்தியாகிறது.

யுகங்கள் நான்கு: கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பன.

கிருதயுகத்தில் ஞானத்தினால் முக்தி.

திரேதாயுகத்தில் தானத்தினால் முக்தி.

துவாபரயுகத்தில் யாகத்தினால் முக்தி.

கலியுகத்தில் பக்தியானால் முக்தி.

பக்தி என்பது வடமொழி. அன்பு என்பது தென்மொழி. கடவுள் பக்தி என்ற வலையில்தான் அகப்படுவார்.

அன்பெனும் பிடியினுள் அகபபடும மலை இறைவன்.

அன்பு இல்லாத ஒருவன் மனிதன் ஆகமாட்டான் திருவள்ளுவர் அன்பில்லாத ஒருவனைப் பிணம் என்று கூடச்சொல்ல விரும்பவில்லை, பணம் பலருக்கு பணம் தரச்செய்து உதவுகிறது. ஆதலால் அன்பில்லாத ஒருவனை என்புதோல் போர்த்த உடம்பு என்கிறார்.

இனி, பக்திக்கு செல்வம் குலம் ஆகிய இத்தகைய தடையில்லை.

தண்ணீர்ப்பந்தல் வைக்க வேண்டுமானால் செல்வம் வேண்டும். செல்வம் இன்றித் தொடங்கினால் இரண்டு நாள் கூட அந்தத் தருமத்தை நடத்த முடியாது.

பக்தி, பரம தரித்திரர்களும் புரியலாம். மிக்க வறியவராகிய குசேல முனிவர் பக்தி செய்து திருவருள் பெற்றார்.

இனி, பக்திக்கு குலம் முதலிய தடையும் இல்லை. உயர்குலத்தினர் தான் பக்தி செய்ய வேண்டும், இழி குலத்தார் பக்தி செய்தல் கூடாது என்ற நியதி இல்லை.

"இறைவனிடம பக்தியில்லாதவர், பெருங்குலத்திற் பிறந்து, பெருஞ் செல்வராகி, எனக்கு மண்ணுலக வாழ்வும், விண்ணுலகரசும் தந்து உதவி புரியினும், அவரை நான் ஒரு பொருளாக மதிக்கமாட்டேன்; சிவபெருமானுடைய திருவடியில் அன்பு வைத்தவர், அங்கம் அழுகிய தொழு நோயராயினும், பசுவை அறுத்துண்ணும் புலையர் குலத்தில் பிறந்தாரேனும், அவர்களே எமது வழிபடு கடவுளர் ஆவர்" என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அன்பைப் பெற்றுவிட்டால், அதுவே எல்லாவற்றையும் பெற்று விட்டதாகும்.

அன்பையுடையோர் என்பையும் பிறருக்கு வழங்குவார்கள்.

அன்பு என்ற பக்தி, சித்தியையும் முக்தியையும் தரும், பரமனும் பக்தருக்கு வாய்த்தவராகத் திகழ்கிறார்.

*திருமுருக கிருபானந்தவாரியார்*

பக்தியினால் விளைந்த விளைவுகளைப்பற்றி ஆதிசங்கரர் வியந்து கூறுகிறார்.

1. மார்க்கத்தில் தேய்ந்த பழஞ் செருப்பு சிவபெருமானுடைய புருவ நடுவில் சென்றது.
2. கொப்புளித்து உமிழ்ந்த நீர் அந்தப் பரமனுக்குச் சிறந்த அபிஷேக நீராகியது.
3. சிறிது கடித்து எச்சில் செய்த புலால் துண்டு உயர்ந்த உணவாக ஆயிற்று.
4. வேடன் பக்தசிரோமணியாக ஆனான்.

ஆகவே பக்தி எதைத்தான் செய்யாது? எல்லா உயர்வையும் தரும். பக்தியுடன் பகவானுடைய திருநாமங்களை ஒருமுறை கூறினும், வினைகள் வெந்து நீறாகும். சகல நலன்களும் உண்டாகும். ◆

### ஞானக்கதிர்

## வலி.மேற்கு இளைஞர்களுக்கு தொழில் சார் ஆங்கிலப் பயிற்சி

மூளாய்,பெப்.15

வலிகாமம் மேற்கில் இளைஞர், யுவதிகளுக்கான விசேட தொழில் சார் ஆங்கிலக்கல்விப்போதனை நடைபெறவுள்ளது.

இலவசமாக நடத்தப்படவுள்ள இந்த ஆங்கிலக்கல்விக்கான வகுப்புக்களில் ஆர்வம் உள்ள அனைத்து இளைஞர் யுவதிகளும் இணைந்து கொள்ள முடியும். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இவ்வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் தமது பகுதி கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறமுடியும்.

ஆறு மாதகாலம் நடைபெறவுள்ள இப்பயிற்சித் திட்த்தின் முடிவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் சான்றிதழ்கள் வழங்கப்படும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-99)

### வரிப்பத்திரம் இல்லை; ரூ.250 அபராதம்

நெல்லியடி,பெப்.16

2001ஆம் ஆண்டுக்கான வரிப்பத்திரம் இன்றி நெல்லியடிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவர் ஒருவரை 250ரூபா அரச செலவாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் பொ.குமாரசாமி உத்தரவிட்டார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி சந்திரசேகரம்பிள்ளை (வயது 40) என்பவரை நெல்லியடிப் பொலீஸார் செவ்வாய் காலை நீதிமன்றில் ஆஜர் செய்த சமயம் இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (க-109)

## இந்தச் சிறுமியின் உயிரை காப்பாற்ற உதவுங்கள்

கருணை உள்ளம் கொண்டவர்களே, இந்தச் சிறுமியின் உயிரைக் காப்பாற்ற உதவுங்கள்.



ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பதினைந்து வயதான செல்வி விஜினா செபமாலைமுத்து இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது இருதயத்தின் இரண்டு நாளங்கள் சுருங்கியுள்ளதால் அவருக்கு உடனடியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தி உள்ளனர். ஆனால் அவரது குடும்பநிலை அதற்கான வசதி அற்றது.

இவரது தந்தை பத்து வருடங்களுக்கு முன்னரே இறந்துவிட்டார். இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளனர். சகோதரனுக்கு வயது 12.


குடும்பத் தலைவரும் வருமானமும் இன்றிக் கஷ்டப்படும் இச்சிறுமியின் தாயார், உங்களைப் போன்ற இரக்க சிந்தை உள்ளவர்களின் உதவியை நாடுகிறார்.

வைத்தியச் செலவுக்கு - சத்திரசிகிச்சைக்கு - மூன்று லட்சம் ரூபா தேவை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறு துளி பெரு வெள்ளம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற உதவியைச் செய்தால் தனது மகளின் உயிரைக் காப்பாற்ற முடியும் என நம்புகிறார். உங்கள் நன்கொடையை ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் 90507 கணக்கு இலக்கத்துக்கு அனுப்பி ஒரு சிறுமிக்கு வாழ்வளியுங்கள். (அ)

விநாயகர் துணை

# இறைபணி தொடர வாழ்த்துகின்றோம்



வியாபாரிமூலை - இன்பர்சிட்டி

**அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்துக்கென**

புதிதாக அமைக்கப்பட்ட இரண்டுவாசல் சப்பறத்தின் எழில்மிகு தோற்றத்தை மேலேயுள்ள படம் காட்டுகின்றது. இந்தச் சப்பறத்தை தனது அன்பளிப்பாகச் செய்து தந்து மிகப்பெரும் இறைகைங்கரியத்தை புரிந்தமைக்காக

## திருவாளர் பொ.சின்னையா

அவர்களை வாழ்த்துவதோடு அவரின் இறைபணி தொடர எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமான் அருள் புரியவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றோம்.

சப்பற அமைப்பு:
விஸ்வப் பிரம்மஸ்ரீ
சிற்ப கலாவாரிதி
நடராஜா சற்குருநாதன்(குரு) ஆசாரியார்
திர்ஷிகா கலைக்கூடம்,
திருநெல்வேலி.

*வத்தனை.* (C/15324) - வத்தனை வாழ் மக்கள்.

---

நீங்காத நினைவுகளில்

# இரண்டாம் ஆண்டுகள்

அன்னையின் மடியில்
19 - 07 - 1927



ஆண்டவன் அடியில்
09 - 02 - 1999

## அமரர் கணபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர், யா/மறவன்புலோ, சகலகலாவல்லி வித்தியாலயம்)

திதி: 16.02.2001

அன்போடு எங்களை அரவணைத்து பாசத்தின்
குலவிளக்காய் காத்து வளர்த்த அப்பாவே!
அதற்குள்ளே - ஈராண்டு ஆனதப்பா!
ஆயிரம் உறவு இருந்தென்ன?
"அப்பா" என்பதற்கு இணையாகுமா?


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

*இல.04.பாரதி வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (84172)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# 14ஆவது ஆண்டு நினைவலைகள்



## கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

அன்னைமடி
30-12-1963

இறைவனடி
22-02-1987

திதி: 16.02.2001

செல்வமே! நீ தான் எங்கள் எல்லோருக்கும்
நர்த்தனம் புரியும் இறைவனாகிவிட்டாய்.......

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்

*23, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (84164)

பிரிவால் துயருறும்
கிருஷ்ணபிள்ளை
குடும்பத்தினர்.

---

## சி.ஐ.டி.யினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் தற்போது யாழ்.பொலீஸ் நிலையத்தில் கொழும்பில் இருந்து வந்துள்ள சி.ஐ.டி.யினரால் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்றைய உதயனில் விசாரணைக்கு அழைக்கப்பட்டோரின் 155 பேரில் ஒரு தொகுதியினரின் பெயர்கள் வெளியாகிஇருந்தன. ஏனையோரின் விவரம் வருமாறு :-

துரைராஜா தசிஜீபன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), தர்மலிங்கம் புவனேந்திரன்(கச்சாய் வீதி, கொடிகாமம்), அல்போன்ஸ் அன்ரன் (இல.1, மத்திய கிழக்கு வீதி, குருநகர்), மதன் ஜே.கதீஸ்வரன்(சாவகச்சேரி), கந்தையா புஸ்பராஜா (நாவற்குழி, தச்சனதோப்பு), இரத்தினம் கிருஸ்ணகுமார்(தொல்புரம் மேற்கு,சுழிபுரம்), சுப்பிரமணியம் இராசலிங்கம் (மூளாய் சுழிபுரம்), கந்தவனம் சிவராசா (மடத்தடி, சாவகச்சேரி வடக்கு)

பரமேஸ்வரன் குமுதினி, பி.பரணீதரன் (பாடசாலை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை) ஜீவநாயகம் மதியழகன் (தொல்புரம்,சுழிபுரம்), அந்தோனிமுத்து கண்ணன்(அம்மன் கோயிலடி, சாவகச்சேரி வடக்கு), தனானந்தன் ரவீந்திரன்(87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்), நடனராசா சாந்தரூபன் (சுதுமலை தெற்கு), சுப்பிரமணியம் முகுந்தகுமார் (6,பலாலி வீதி, யாழ்ப்பாணம்), சிவானந்தன் ரமணன் (மீசாலை கிழக்கு), காசித்தம்பி தர்மதாசன்(மீசாலை கிழக்கு, மீசாலை), ஆறுமுகம் அமலன் (அத்தியடி வீதி, கச்சேரி வீதி, கொடிகாமம்), அகிலேஸ்வரன் அமலராஜ் (அக்காராயன்குளம்), மரியம்பிள்ளை ஞானராஜா (பீடாரி கோயிலடி, ஆனைக்கோட்டை), முத்துத்தம்பி கெங்காதரன்(கமலாசினி வீதி, சரசாலை தெற்கு), வேலுப்பிள்ளை உதயகுமார் (வாவி, கொடிகாமம் வடக்கு), விநாசித்தம்பி கணேசமூர்த்தி (சுழிபுரம் மத்தி), செல்வரட்ணம் ஜெயசீலன் (சந்திரபுரம், மட்டுவில் வடக்கு), சரஸ்வதி சௌந்தரராஜன் (சந்திரபுரம், மட்டுவில் வடக்கு), அரியகுட்டி ஜெயந்தன்(கோட்டைக்காடு, மல்லாகம்), அப்புத்துரை ஸ்ரீகரன்(112/ஏ, மோகன்தாஸ் வீதி, சந்திரபுரம், சாவகச்சேரி), செல்வரட்ணம் பார்த்தீபன் (57, ஆனந்தவடலி, மூன்றாம் ஒழுங்கை, கொழும்புத்துறை), நல்லசேகரம்பிள்ளை மணிவண்ணன் (வாழையடி வீதி, மட்டுவில் தெற்கு), கணேஸ்ரமேஸ் (நாவற்குழி தெற்கு), அல்லேலூயா மேரி ஜேம்ஸ் (ஓடக்கரை வீதி, குரு நகர்), சந்திரசேகரம் புவனேந்திரன் (மீசாலை கிழக்கு), நடராஜா புத்திரராஜா (கோப்பாய் மத்தி), பொன்னம்பலம கண்ணதாசன் (தச்சன்தோப்பு), பண்டாரம் இரத்தினம் செல்வகுமார் (தச்சன்தோப்பு, கைதடி), நடராஜா விநாயகமூர்த்தி (முல்லையடி, பளை), சின்னத்தம்பி ஜெயபாலன் (பன்னாலை, தெல்லிப்பழை), பொன்னுக்கோன் குகதாஸ்(கௌரிபவன், வீமனகாமம், தெல்லிப்பழை), பெர்னாண்டோ ஜெயக்காந்தன்(43/2, புது வீதி, கொய்யாத்தோட்டம்), சிதம்பரபிள்ளை பேரின்பநாதன் (நாவற்குழி தெற்கு), செல்லத்துரை குமார் (31, பூங்கா வீதி, குருநகர்), ஆ.குணரட்ணம (நாகர் கோயில் கிழக்கு), தம்பன் பாஸ்கரன (கைதடி வடக்கு), ஜெயானந்தம் ஜெனகன்(18, குமார வீதி, நல்லூர்), நவம் ஜெகதீஸ் ஜெபதீபன் (4, ஈச்சமோட்டை வீதி, சாவகச்சேரி), சின்னத்தம்பி ஜெயேந்திரன் (மீசாலை வடக்கு), அப்புக்குட்டி நடராஜா (மீசாலை வடக்கு), கனகரட்ணம் நாகேந்திரன் (மீசாலை வடக்கு), இராமலிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா (சாவகச்சேரி வடக்கு, மீசாலை), தர்மலிங்கம் சுதாகரன் (இலந்தைக்குளம், கொழும்புத்துறை), நடராஜா ஜெயராஜா (785, கண்டி வீதி, அரியாலை), கணபதிப்பிள்ளை யோகராஜா (1046, மத்திய சனசமூக நிலையம், அச்சுவேலி வடக்கு), வேதநாயகம் ஜெரோம் இமாலியானஸ்(17, கொட்டடி வீதி, யாழ்), நவரட்ணராஜா முரளீதரன (பங்களா வீதி, மீசாலை மேற்கு), சின்னையா சோமஸ்கந்தர் (புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்), செல்வராஜா பிரதீபன் அலைஸ்ரமணன (57, ஆனந்தம்வடலி, 3ஆம் வீதி, கொழும்புத்துறை), பொன்னன்ரவீந்திரன (கைதடிச் சந்தி), நடராஜா அகிலராசன (சரசாலை தெற்கு), சின்னத்தம்பி சிவகுமார் (நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு), செல்வராஜா பிரபாகரன் (கோயிலாக் கண்டி மத்தி, தச்சன்தோப்பு), கொன்ஸ்ரன்ரைன் றோய் மிஸ்மேரி சுகந்தி(15/3, டேவிட் வீதி, யாழ்.), மிக்கேல் பேர்னாட் ஜோன்சன்(7/1,புதிய வீதி, கொய்யாத்தோட்டம்), பொன்னுத்துரை மகாதேவன் (வைரவர் கோயிலடி, கச்சாய் தெற்கு), கே.உதயகுமார்(16/2, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை), சபாரட்னம் ராஜேந்திரகுமார் (சரசாலை தெற்கு), கதிரவேலு ஜனந்தன்(சங்கரத்தை, வட்டுக் கோட்டை), ஜோன்புள்ளே அன்ரன் அமலநாதன் (நாவற்குழி) (ஐ-ஓ-6)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
12 - 07 - 1940



மறைவு
19 - 01 - 2001

அமரர்

## செல்லத்துரை சின்னத்தம்பி (பப்பா)

(நவாலி)

**அன்பின் உருவமாய்**
**ஆசையுடன் எமை வளர்த்து**
**இன்ப வாழ்வு தந்த எமது தந்தையே!**
**விண்ணுலகம் போனாயோ?**

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.02.2001) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*முகவரி:*
*சோமசுந்தரம் வீதி,*
*சிவன்கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.* (84157)

மனைவி, மகன், மகள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

---

# பதவி வெற்றிடம்

## சுகாதார வைத்திய அதிகாரி (ஒப்பந்த அடிப்படை)

## மாநகர சபை - யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாநகரசபையால் யாழ்.மாநகர எல்லைக்குள் நடத்தப்படும் தாய் சேய் பராமரிப்பு நிலையங்களை நடத்தல், நோய்த் தடுபபு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பணிகளை நிறைவேற்றும் முகமாகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான

**விண்ணப்ப முடிவு திகதி - 28.02.2001.**

இந்நியமனம் தற்காலிகமானதும், ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையிலானதும், வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியதுமாகும். தேவையேற்படின் மீண்டும் புதுப்பிக்கப்படக் கூடியது.

**தகைமைகள்:-**

MBBS பட்டம் அல்லது அதற்கு கூடுதலான தகுதியுடைய மருத்துவர்கள்.

அல்லது

இளைப்பாறிய மேற்படி பட்டம் பெற்ற வைத்திய அதிகாரிகள்.

அல்லது

தாய்சேய் பராமரிப்பு நிலையங்களை நடத்துவதற்கான அனுபவம் வாய்ந்த பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்கள்.

அல்லது

இளைப்பாறிய மேற்படி அனுபவமுள்ள உதவி மருத்துவர்கள்.

60 வயதுக்கு மேற்படாதவராக இருப்பது விரும்பத்தக்கது. எனினும், வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**சம்பளம்:-**

இளைப்பாறிய அரச மருத்துவ உத்தியோகத்தர் எனின் இளைப்பாறும் போது அவர் பெற்ற வேதனம்.

அல்லது

இரு சாராருக்கும் பொருந்தக்கூடிய வகையில் பேசித் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை.

எனினும் தங்களின் விண்ணப்பத்தில் சம்பளக் கோரிக்கையைக் குறிப்பிடுவது விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகவே தயாரிக்கப்பட்டு 28.02.2001 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

**"ஆணையாளர்,**
**மாநகரசபை யாழ்ப்பாணம்."**

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரங்களில் மாநகர ஆணையாளருடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ளமுடியும்.

தொலைபேசி இலக்கம்:- 021 - 2275, 2744

இராசா தணிகாசலம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
14.02.2001

(C/15314)

# மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத மின்சாரசபையினரின் கையாலாகாத நிலை!

மின்சாரம்!

யாழ்குடாநாட்டு மக்களுக்கு கைக கெட்டியும் வாய்க்கெட்டாமல் இருக்கும - அத்தியாவசியமாக இருந்தும் அடிக்கடி காணாமல் போய்விடுகின்ற - ஒன்றாக அது மாறிவிட்டது.

பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் மாணவர்களுக்கும் -

சமையல் வேலைகளைச் செய்யும் வீட்டுப் பெண்களுக்கும் -

தொலைக்காட்சியில் தொடர் நாடகங்களை பார்த்து ரசிக்கும் ரசிகர்களுக்கும் -

கைத்தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் -

இன்று மின்சாரம் ஓர் அத்தியாவசியமான விவகாரம்.

ஆனால் மின்சார விநியோகம் சீரில்லை. மக்களுக்கு மின்சாரம் கட்டாயம் தேவையான - அதாவது மாலை நேரத்திலும், அதிகாலை நேரத்திலும் - மின்சார வெட்டு. அறிவிக்கப்பட்ட நேரத்துக்கு மேலாக திடீர் திடீர் என்று மின்சாரம் மாயமாகிவிடும்.

இதன் காரணமாக பொதுமக்கள் படும் இன்னல்களை, கஷ்டங்களை மின்சார சபை உணரவேயில்லையே என்று மக்கள் கொதிக்கிறார்கள்; குமுறுகிறார்கள். மின்சார சபையைத் திட்டித் தீர்க்கின்றார்கள்.

இப்படிச் சீரில்லாத மின் விநியோகம் எமக்குத் தேவைதானா என்று சீறுகின்றார்கள் மக்கள்.

### அதிகாரி தரும் விளக்கம்

இது விடயமாக மின்சார சபை அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் தமது கையாலாகாத நிலைமையை விவரிக்கின்றார்கள்.

"ஒரு காலத்தில், நீர் மின்சாரம் லக்ஸபானாவில் இருந்து இங்கு வந்தது. அதேசமயம் சுன்னாகத்திலும் மின் உற்பத்தி நிலையம் இயங்கியது. மக்களுக்கு, தேவையான அளவு மின்சாரத்தை வழங்கினோம். இன்று அந்த நிலை இல்லையே! காங்கேசன்துறையில் இயங்கும் 'கூல் எயர்' நிறுவனத்திடம் நாம் கையேந்தி நிற்கிறோம். அவர்கள் வழங்கும் மின்சாரத்தை பாரபட்சம் இன்றி சகல பகுதிகளுக்கும் பங்கிட்டு வழங்குகிறோம்" - என்று கூறுகின்றார் மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர். அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

### தேவையும் கிடைப்பதும்

குடாநாட்டில் மின் இணைப்புப் பெறறவர்களுக்கு முழுமையாக மின் விநியோகம் வழங்குவதற்கு குறைந்தது 15 மெகாவாட் மின்சாரம் தேவை. இந்த மின்சாரத் தேவையை 'கூல் எயர்' நிறுவனத்திடம் இருந்து பெற்ற 12 மெகாவாட் மூலமும், சுன்னாகம் மின் நிலையத்தில் நாமே உற்பத்தி செய்த 3 மெகாவாட் மூலமும் பூர்த்தி செய்து வந்தோம். ஆனால் இன்று 'கூல் எயர்' நிறுவனத்திடம் இருந்து இப்போது கிடைக்கும் ஆக 9 மெகாவாட் மூலமே முழுமையான தேவையையும் பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் உள்ளோம்.

இது கூட சில சமயங்களில் ஒழுங்காகத் தரப்படுவதில்லை. இதன் காரணமாகவே திடீர் மின்சார வெட்டுக்கள் ஏற்படுகின்றன. இத்தகைய இக்கட்டான நிலையில் மின்சார சபை உள்ளது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

- இப்படி அந்த அதிகாரி மேலும் விளக்கம் அளித்தார்.

### 'கூல் எயர்' நிலைமை

'கூல் எயர்' நிறுவனத்தில் ஆரம்பத்தில் 17 ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டன. அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய 15முதல்17 மெகாவாட் மின்சாரத்தை குடாநாட்டிலுள்ள சகல பகுதிகளுக்கும் வழங்கக்கூடிய விதத்தில் இணைப்புக்களை விஸ்தரித்திருந்தோம்.

அண்மைக்காலத்தில் மின் நிலையப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஜெனரேட்டர்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன. மற்றும் சில பழுதடைந்தன. அதன் பின்னர் அந்த ஜெனரேட்டர்களில் ஒன்பது திருத்தப்பட்டன. எனினும் அவைமூலம் கூடிய அளவு மின்சாரத்தைப் பெற முடியவில்லை. தற்சமயம் 9 மெகாவாட் மட்டும் அங்கு உற்பத்தி செய்யப்பட்டு எமக்கு வழங்கப்படுகின்றது. அதையே பங்கிட்டு வழங்குகின்றோம்.

### காப்புறுதி கிடைக்கவில்லை

ஜெனரேட்டர்களுக்கு அந்த நிறுவனம் காப்புறுதி செய்திருந்தது. சேதம் அடைந்தவற்றுக்கு காப்புறுதி பெறுவதற்கு அந்த நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அந்த முயற்சி பலன் அளிக்காத காரணத்தால் ஏனையவை திருத்தப்படவில்லை.

அந்த நிறுவனத்துடன் மின்சார சபை செய்துகொண்ட ஒப்பந்தத்தில், முதல் கட்டமாக 10 மெகாவாட்டும் இரண்டாம் கட்டமாக 7 மெகாவாட்டும் தருவதாக உறுதி கூறப்பட்டிருந்தது. ஆனால் அங்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எம்மால் எதுவும் செய்ய முடியாது உள்ளது.

சேதமடைந்த ஜெனரேட்டர்களுககான காப்புறுதி கிடைத்து அவை திருத்தப்படும் பட்சத்தில் குடாநாட்டுக்கு 24 மணிநேர மின்சாரத்தை ஒழுங்காக எம்மால் வழங்கக்கூடியதாக இருக்கும்.

### சுன்னாகமும் செயல் இழந்தது

இதற்கு மேலாக -

மின்சாரசபையின் சுன்னாகம் மின் நிலையத்தில் இருக்கும் ஜெனரேட்டர் மூலம் 3 மெகாவாட் மின்சாரம் பெற்று வந்தோம். அந்த ஜெனரேட்டரில் ஏற்பட்ட பழுது காரணமாக அதுவும் நின்றுவிட்டது. அங்கு திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன.

திருத்தவேலைகளுக்கான உதிரிப்பாகங்களை இங்கேயே தயாரித்து பொருத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த ஜெனரேட்டர் இயங்க ஆரம்பித்ததும் மின் விநியோகம் ஓரளவு சீராகும் என நம்புகிறோம்.

யாழ். நகரத்துக்கு மின் விநியோகம் யாழ்பல்கலைக்கழகத்துக்கு பின்புறம் உள்ள உப மின் நிலையம் மூலமே வழங்கப்படுகின்றது. அண்மையில் அந்த மின் நிலையத்தில் உள்ள மின்மாற்றிகள் எரிந்ததால், மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து மின்மாற்றி எடுத்து வந்தே அங்கு பொருத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்சமயம் அந்த மின்மாற்றி இங்கு எடுத்து வருவதற்கு தயார் நிலையில் உளளது. கப்பல் போக்குவரத்து வசதி கிடைத்ததும் அது இங்கு எடுத்து வரப்பட்டு பொருத்தப்படும். அதன் பின்பே நகரத்திற்கான மின் விநியோகம் சீராகும். இதற்கு ஆகக் குறைந்தது ஒருமாதம் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## யாழ். நகரின் நிலைமை சீரடைய ஒரு மாதம் கூடச் செல்லலாம்

இவற்றைவிட மின்சாரசபை பெரும் நிதி நெருக்கடி நிலையில் உள்ளது. குடா நாட்டில் மின் விநியோகத்தைச் சீராக மேற்கொள்ள அரசாங்கம் எதுவித நிதி உதவிகளையும் மின்சார சபைக்கு இதுவரை வழங்கவில்லை.

நிதி உதவி தருமாறு திருப்பித் திருப்பி விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பலன் தரவில்லை.

### உறுதி கிடைத்தது உதவி கிடைக்கவில்லை

எரிபொருள், மின் சக்தி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அண்மையில் பலாலிக்கு வந்திருந்த சமயம் நாம் அவரை நேரில் சந்தித்து நிதி உதவி வழங்குமாறு அவரிடம் கோரிக்கை விடுத்தோம். உடன் உதவிகள் வழங்குவதாக அவரும் உறுதிமொழி வழங்கினார். ஆனால் இன்று வரை உதவிகள் எதுவும் கிட்டவில்லை. இரு 'பிக்கப்' வாகனங்கள் மட்டும் கிடைத்தன.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் நிதி உதவி வழங்குமாறு கோரிக்கை விட்டோம். யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனிடமும் இதே கோரிக்கையை முன் வைத்துள்ளோம்.

- மாலை குகன் -

ஆனால் இதுவரை எந்தவித உதவியும் வந்துசேரவில்லை. இதன் காரணமாக சீரான பணிகளை எம்மால் செய்யமுடியாதுள்ளது.

'பொதுமக்களுக்கு சீரான சேவையை வழங்கத் தேவையான உதவிகளைத் தாருங்கள். இல்லாவிட்டால் இங்குள்ளவர்களை வேறு இடத்திற்கு மாற்றுங்கள்' - என்று தலைமைப்பீடத்திடம் கோரினோம். இந்த அச்சுறுத்தலை அடுத்தாவது உதவிகள் கிடைக்கும் என நம்பினோம்.ஆனால் அதற்குக் கூட பலன் கிடைக்கவில்லை.

குடாநாட்டில் சீரான மின் விநியோகம் இடம்பெற பொதுமக்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



*விண்ணில் தாயின்றித் தவிக்கும் சக்திக்கும்*
*சண்முகத்திற்கும் தாயாக*
*சாவினைப் பாதையாக்கி எங்களைத்*
*தாயின்றித் தவிக்கவிட்டுச் சென்றீர்களோ அம்மா?*
*கண்ணீரே தண்ணீராகப் பெருகி அதில் மூழ்கி*
*தவிக்கின்றோம், தத்தளிக்கின்றோம் அம்மா – அம்மா – அம்மா!*
*இனி என்றென்றும் எங்களின் வழிப்படுத்தலுக்குரிய*
*போற்றுதலுக்குரிய, வணக்கத்திற்குரிய தெய்வத்தாய் ஆனாய் அம்மா!*

இன்று (16-02-2001) வெள்ளிக்கிழமை நண்பகல் மதவடி ஒழுங்கை, திருநெல்வேலியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும், எமது தவறுதலால் அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தவறை மன்னித்து கலந்துகொள்ளுமாறும் மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் அம்மாவின் மரணச் செய்தி கிடைக்கப்பெற்றதிலிருந்து வீட்டுக் கிருத்திய நிகழ்வு வரைக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்களின் சிரந்தாழ்த்திய நன்றிகள்.

**திருமதி**
**சிவசங்கரன் இராசம்மா**

அன்னையின் மடியில் **03-08-1933**

சிவனின் திருப்பாதங்களில் **17-01-2001**

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தகவல்:**
த.சிவசங்கரன் (முன்னாள் சாறி எம்போறியம், சின்னத்துரை பிறதேர்ஸ் - ஊழியர்)
சி.சிவராஜன் (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி)
சி.கணேசராஜா (கணேசன் ரேடர்ஸ், வெள்ளவத்தை, கொழும்பு -6.)

(84203)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

காளி கோயிலடி, ஏழாலையைச் சேர்ந்த லோகநாதன் லலிதாராணி என்பவருடைய தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை என்பன 13.02.2001 அன்று நீர்வேலி நிலாவரை மாசவன் சந்தியூடாக ஏழாலைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா/கன்னாதிட்டி சயன்ஸ் அக்கடமியில் அல்லது மல்லாகம் T.N. தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழுங கப்படும (84212)

**40/9,** நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய செல்லப்பா கபில்ராஜ் என்பவருடைய விசேட அ.அ. (இல.0902031514) யாழ்நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (84173)

72 சுப்பிரமணியம் வீதி, அரியாலையைச் சேர்ந்த ஆறுமுகம் சுகுணா என்பவருடைய தே.அ.அ. (இல. 636671312V), விசேட அ.அட்டை, தொழில் அடையாள அட்டை (பனை அ.சபை) என்பன 13.02.2001 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 53, கண்டி வீதி, பனை அபி. சபையில் ஒப்படைத்துதவவும். (84186)

இ.எலிசபெத் அஞ்சலோ என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 347720143v) 05.02.2001 அன்று சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.60, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி என்னும் முகவரியில் அல்லது உதயன் பணிமனையில் ஒப்படைத்து உதவவும். (84197)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்ப 1968இல் பிறந்த கிரகபாவம் 66 உடைய பூரட்டாதி நட்சத்திர பட்டதாரி ஆசிரியைக்கு அரச தொழில்புரியும் மணமகன் தேவை. "கஜமுகா திருமண சேவை" இல.29, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (84196)

## விற்பனைக்கு

பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. வயது இரண்டு மாதம். தொடர்பு: **S.**கனகராசா ஞான வைரவர் கோயிலடி வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (84207)

609, நாவலர் வீதி, 1 1/2 பரப்பு காணி வீட்டுடனும் (சகல வசதிகளுடன் புதியது), பாடசாலை வீதி ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் 31/2 பரப்புக் காணி வீட்டுடனும் (கடையுடன்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு என்.சத்தியரூபன், 354, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/15307)

## கைமாறிவிட்டது

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி தேநீர்க் கடைக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த லுமாலா ஜென்ஸ் சயிக்கிளை (இல. 55967486G) எடுத்துக் கொண்டு பதிலாக கீரோ லேடிஸ் சயிக்கிளை விட்டுச் சென்றுள்ளார்கள். கைமாறி எடுத்தவர்கள் தயவு செய்து இல.177, நாவலர் வீதி இல்லத்தில் வந்து மாற்றிக் கொள்ளவும். (84204)

## இறைச்சிக்கோழி தேவை

புறொயிலர், கல்பேட், சேவல் தேவை. தொடர்பு கொள்ளவும் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) நல்லூர். (84169)

## தவறிவிட்டது

மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த கனகசபை கஜந்தன் என்பவரது விசேட அஅட்டை (091036089) நீர்வேலிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **S.**செபஸ்தியாம்பிள்ளை, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (84184)

# திருமணத்தில் தாலிக்கொடி மாறிய சுவாரஸ்ய சம்பவம்!

ஆலயம் ஒன்றில் ஒரே சமயத்தில் இடம்பெற்ற பல திருமண வைபவங்களின் போது மாங்கல்யத்தை மாறிக் கட்டிய சுவாரஸ்யமான சம்பவமொன்று கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது.

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது-

ஐந்துக்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்தேறவிருந்த அந்நேரத்தில் அத்தனை தாலிக்கொடிகளும் முருகன் ஆசிவேண்டி பூசிப்பதற்காக, தட்டுகளில் எடுத்து ஒரேநேரத்தில் முருகனின் காலடியில் வைத்துப் பூசகரால் அர்ச்சனை செய்யப்பட்டது.

பின் தாலிகட்டும் வேளையில் அவரவரிடம் கொடிகள் ஒப்படைக்கப்பட்டன. அப்போதே இக் கொடி மாற்றம் இடம்பெற்று விட்டது.

அவரவரிடம் இருந்த தாலிக் கொடிகள் முகூர்த்த வேளையில் கட்டப்பட்டன.

தாலிகட்டு நிகழ்வு முடிவடைந்த பின்பே தாலிக் கொடிகள் இரண்டு மாறிக் கட்டப்பட்டது தெரியவந்தது.

இச்சம்பவத்தில் 20 தங்கப் பவுண கொடி கட்டவேண்டியவர் கழுத்தில் 7 தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக் கொடி கட்டப்பட்டது. 7 தங்கப் பவுண நிறையுடைய தாலிக்கொடி கட்ட வேண்டியவர் கழுத்தில் 20 தங்கப் பவுண் நிறையுள்ள தாலிக்கொடி கட்டப்பட்டிருந்தது.

விடயத்தைத் தெரிந்து கொண்ட இரு திருமண வீட்டாரும், முகூர்த்த வேளையில் கட்டப்பட்ட கொடிகள் கழற்றக்கூடாத நிலையை உணர்ந்து, பெறுமதியை கொடுப்பதாக ஒப்புக் கொண்டதை அடுத்து திருமணம் இனிதே நிறைவு செய்யப்பட்டது.

---

## மக்களின்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவும் எமக்குத் தேவை. பொது மக்கள் சிக்கனமாக மின்சாரத்தை பாவிக்க வேண்டும். அத்துடன் சட்ட விரோதமாக மின் பெறுவதை நிறுத்த வேண்டும். கூடுதலான மின் பாவனை உள்ள மாலை நேரத்தில் சிக்கனமாக மின்சாரத்தைப் பாவித்து பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பழுதடைந்துள்ள ஜெனரேட்டர்கள் திருத்தப்பட்டு, போதியளவு நிதி உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் குடாநாட்டின் மின் விநியோகம் சீராகும் - என்றார்.

## சிறுவர் சோலை நிகழ்ச்சி!

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்றததினர் ஆச்சிரமத்தைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்களிடையே சிறுவர் சோலை நிகழ்ச்சியை மகா சிவராத்திரியன்று நடத்தவுள்ளனர்.

அன்றைய தினம் முன்பள்ளி மாணவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் அங்கு இடம்பெறும். (கு-86)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருவாளர் க.இளங்கோவன் அவர்கள்**

(முன்னாள் தபாலதிபர், தற்போதைய தீவுப்பகுதி விவாகப் பதிவாளர்)

**29.01.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் திரு. R.T. விக்னராஜா முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவரது சேவைகள் தொடர எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.**

*153A, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.*

**A.R.S.**
**அன்னராஜா களஞ்சியம் உரிமையாளரும், சக ஊழியர்களும்.** (84208)

# சென்ஜோன் அம்புலன்ஸ் தேசிய பாசறை - 2000

யாழ்.கொழும்பு மக்களும் ஐரோப்பிய வாழ் தமிழ் மக்கள் பலரும் T.B.C வானலையூடாக அறிந்து கல்லூரி சார்ந்த யாழ். மண்ணின் வீரர்களை, அவர்களின் துணிவுக்கும் புய வலிமைக்கும் 20க்கு மேற்பட்ட வெற்றிக்கும், மீண்டும் சிறந்த மாவட்டம் என சரித்திரம் படைத்தமைக்கும் பாராட்டாதவர்கள் இல்லையெனலாம். 'யாழ்.அவல நிலை-சென்ஜோன் அம்புலன்ஸ் உதவி' என்ற பாசறை நிகழ்வை பல இடங்களில் வெளிக்கொணர்ந்தபோது சிங்களவர்கள், தமிழர்கள் நெஞ்சுருகி அழாதவர்கள் இல்லை. நிர்வாக தீர்மானத்திற்கு அமைய, குறுகிய கால பயிற்சியில் சிங்கள மொழியில் தேசிய கீதத்தை சகல மாவட்டங்களுக்கு இடையேயான போட்டியில் முதலாம் இடத்தை பான்ட் வாத்தியத்துடன் இசைத்துப்பெற்றனர் என்றால் இவர்களின் கல்வி, கலை, கலாசார திறனை உலக வரலாற்றில் நோக்கிப் பாராட்டப்பட வேண்டியவர்களே. தமிழ் மணம் வீசும் இந்த இளம் குஞ்சுகளை, வீரதீரர்களை தாம் நேரில் பார்க்க ஐரோப்பிய ஒன்றியம் மக்கள் சார்பில் பல நாடுகளுக்கு வரும்படி இலவச ஒழுங்கு செய்வதாக அழைப்புத் தந்துள்ளனர். தங்கப்பதக்கங்கள் பெற்ற நா.குணபாலசிங்கம், சி.எழிலரசி ஆகியோரை பாராட்டுகின்றோம்.

- திருலோகச்சந்திரன் மதனரூபன் - யாழ்.இந்துக் கல்லூரி
- நாகலிங்கம் குணபாலசிங்கம் - மகாஜனாக் கல்லூரி
- கருணேந்திரன் கருனதாஸ் (சிறந்தவீரன்) - கொக்குவில் இந்துக் கல்லூரி
- காயத்திரி அருந்தவராஜா - பெரியபுலம் மகாவித்தியாலயம்.
- தீபா சிவயோகம் - இராமநாதன் கல்லூரி
- வசந்தலா பிரேமச்சந்திரன் (சிறந்த வீராங்கனை) - யாழ்.இந்து மகளிர் கல்லூரி
- கருணாநிதி யோகேஸ் (சிறந்தவீரன்) - கொக்குவில் இந்துக் கல்லூரி
- சிவலிங்கம் சிவசுதன் - யூனியன் கல்லூரி
- கமலலோஜினி சுப்பிரமணியம் - யாழ்.இந்து மகளிர் கல்லூரி
- தமிழினி இராமச்சந்திரன் - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
- மார்க்கண்டு கேதீஸ்வரன் - கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி
- நாகலோஜினி சுரேஸ்குமார் - மருத்துவதாதி, யாழ்.மாநகரசபை.
- தர்மலிங்கம் சிறீபிரகாஸ் (சிறந்தவீரன்) - யூனியன் கல்லூரி
- நிஷாந்தராகினி பத்மநாதன் (சிறந்தவீராங்கனை) - யூனியன் கல்லூரி
- விஷ்ணுபிரியா சச்சிதானந்தராஜா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
- அரியரட்ணம் பகீரதன் - வயாவிளான் ம.ம.வி
- எழிலரசி சிவப்பிரகாசம் - யூனியன் கல்லூரி
- ஆறுமுகம் விஜயதர்ஷன் - யூனியன் கல்லூரி
- சுபிதா குகராஜா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
- சந்திரபாலன் விஜிந்தன் - யூனியன் கல்லூரி
- பிரேமராஜா கஜமுகன் - வயாவிளான் ம.ம.வி
- கந்தசாமி வசிகுமார் - யூனியன் கல்லூரி
- கார்த்திகா சிங்கராஜா - உரும்பிராய் இந்துக் கல்லூரி
- கருணானந்தராஜா பிரதாபன் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி
- சச்சிதானந்தராஜா மவுலீஸ்வரி - பிரதிநிதி பண்டத்தரிப்பு மகளிர்
- கதிரமலை தயாளினி -பொறுப்பாளர்உ.மா. ஆணையாளர்

**பாராட்டுகின்றோம்! வாழ்த்துகின்றோம்!!**

**திரு. திருமதி க.அருந்தவராஜா**
**ஆணையாளர்கள்.**

(84200)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 - 05 - 1926



மறைவு 17 - 01 - 2001

## திருமதி நவமணி பாலசிங்கம்

*அன்பின் திருவுருவாய்*
*பாசத்தின் மறுபிறப்பாய்*
*குடும்பத்தின் அகல் விளக்காய்*
*ஒளிகாட்டி வழிகாட்டி நின்ற அன்புருவே!*
*எம் அகத்தில் அசையாது வீற்றிருப்பீர்*
*ஆண்டாண்டு காலமாக!*

17-01-2001 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இன்று (16-02-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*"நிஸாம் மகால்"*
*குளப்பிட்டி சந்தி*
*கொக்குவில்.* (84194)

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## வைத்தியலிங்கம் விக்கினேஸ்வரன்

(ஓய்வு பெற்ற இலங்கைவங்கி மாவட்ட அதிகாரி திருகோணமலை, முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் - சுன்னாகம், பருத்தித்துறை)

கந்தர்மடம் பலாலிவீதியை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் விக்கினேஸ்வரன் 14.02.2001 புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் நகுலேசன், திலகேசன், விமலேசன், ஜெகநேசன், சுமித்திரா, சாமினா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், டயானா, மஞ்சுளா, சாமினி, மனா, பற்றிக் மரியதாசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2001) சனிக்கிழமை காலை 29, அல்பேட்பிளேஸ் தெஹிவளையில் நடைபெற்று மதியம் 2.00 மணிக்கு பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*T.P. 074 205817*
*29, அல்பேட்பிளேஸ்,*
*தெஹிவளை.* (84210)

தகவல்:
திலகேசன்
(மகன்)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 6 மாத சிசு உட்பட 26 பேர் பலி!

### அல்ஜீரியாவில் கொடூர சம்பவம்!

அல்ஜியஸ், பெப். 16

அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 மாதக் குழந்தை உட்பட 26 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தலைநகர் அல்ஜியஸிலிருந்து 60 மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றுக்குள் கடந்தசெவ்வாய்கிழமை புகுந்த தீவிரவாதிகள் வீடு வீடாகப் புகுந்து அங்கிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

இதில் 6 மாதச் சிசு மற்றும் பெண்கள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர்.

ஜி. ஐ. ஏ என்ற இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவே இந்தப் படுகொலைகளைச் செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த வியாழன் அன்றும் இந்தத் தீவிரவாதிகள் 13 பேரைச் சுட்டுக்கொன்றனர்.

அல்ஜீரிய அரசு பொது மன்னிப்பு வழங்க முன் வந்த போதும் அதனை இந்தத் தீவிரவாத அமைப்பு நிராகரித்தது.

இந்த ஆண்டில் இதுவரை 280 பேரை இவர்கள் கொன்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலியத் தலைநகரில் பலஸ்தீனர் பஸ்ஸினால் மோதியதில் 8 படையினர் உட்பட 9பேர் பலி!

டெல்அவிவ், பெப். 16

இஸ்ரேலில் பலஸ்தீனர் ஒருவர் பஸ்ஸால் மோதி 9 பேரைக் கொன்றார்.

தலைநகர் டெல் அவிவில் பஸ்தரிப்பிடம் ஒன்றில் காத்திருந்த இராணுவத்தினரும் பொதுமக்களும் கலந்த கூட்டத்தின்மீது பலஸ்தீனரான பஸ் ஓட்டுநர் பஸ்ஸை மோதியதில் 8 இஸ்ரேலிய இராணுவத்தினரும், பொதுமக்களின் ஒருவரும் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

9 பேரையும் நசுக்கிக் கொன்ற ஓட்டுநர் பஸ்ஸை வேகமாகச் செலுத்தித் தப்ப முயற்சித்தார்.

ஆனால் அங்கு நின்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஓட்டுநரைக் காயப்படுத்திப் பிடித்தனர்.

காஸாவில் யசீர் அரபாத்தின் மெய்ப் பாதுகாவலர் சொல்லப்பட்டதுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட படுகொலைகள் இவை என்று இஸ்ரேலியத் தரப்பில் கூறப்படுகிறது.

இதற்கிடையில், அமெரிக்க வெளிவுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல், பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துடன் தொடர்பு கொண்டு மத்திய கிழக்கு வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும்படி வற்புறுத்தியுள்ளார்.

(ஒ-7)

## தாய்லாந்திலிருந்து கடத்தப்படும் மாட்டிறைச்சியில் நோய்க்கிருமி; மலேசிய மக்களிடையே பீதி!

கோலாலம்பூர், பெப். 16

தாய்லாந்தில் 2 பேருக்கு 'மாட்டுப் பைத்தியம்' நோய் பீடித்திருப்பதை அடுத்து மலேசியாவில் மாட்டிறைச்சி உண்பவர்கள் மத்தியில் பீதி கிளம்பியுள்ளது.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து மலேசியா மாட்டிறைச்சியை இறக்குமதி செய்கிறது.

ஆனால் தாய்லாந்தில் இருந்து சட்டவிரோதமாகக் கடத்தி வரப்படும் மாட்டிறைச்சி மலிவாகக் கிடைப்பதால் பெரும்பாலான மலேசியர்கள் இதனையே உணவுக்குப் பயன்படுத்துகின்றனர்.

தற்போது தாய்லாந்தில் 'மாட்டுப்பைத்தியம்' நோய் பரவியிருப்பதால் தாய்லாந்தில் இருந்து கடத்தி வரப்படும் மாட்டிறைச்சியை உண்ண வேண்டாம் என்று மலேசிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மாடுகளில் காணப்படும் 'மாட்டுப் பைத்தியம்'நோய்க் கிருமிகள் அந்த மாட்டின் இறைச்சியை உண்பவர்களின் மூளையைத் தாக்குகிறது.

## அரபாத்தின் பாதுகாவலர் கொல்லப்பட்டார்

காஸா, பெப். 16

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலரை இஸ்ரேலியக் ஹெலிகள் குறிவைத்து விரட்டித் தாக்கிக் கொன்றன.

காஸாப் பகுதியில் இந்தச் சம்பவம் நடந்ததாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

லெபனானைத் தளமாகக் கொண்டுள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளில் ஒருவரே கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது. (ஒ)

## அமெரிக்காவில் கலாநிதிகளின் எண்ணிக்கையில் சரிவாம்

வாஷிங்ரன், பெப். 16

கடந்த 13 ஆண்டுகளில் முதல் முறையாக அமெரிக்காவில் 'கலாநிதி' பட்டங்களைப் பெறுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்துள்ளது.

அமெரிக்காவில் 392 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் வெளிநாடுகளில் இருந்துவரும் மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு 41 ஆயிரத்து 140 பேர் ஆராய்ச்சி மாணவர்கள் 'கலாநிதி' பட்டம் பெற்றுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த எண்ணிக்கை 48 சதவீதம் குறைவாகும்

இந்த ஆண்டு 'கலாநிதிப்' பட்டம் பெற்றவர்களில் 11 ஆயிரத்து 409 பேர் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொங்கோ மோதலில் ஈடுபடும் சிறுவரை மீட்க நடவடிக்கை

### 'யுனிசெவ்' மேற்கொள்கிறது

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களை தமது பராமரிப்பில் விடும்படி 'யுனிசெவ்' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு உகண்டா இணங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கொங்கோ மோதலில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினரும் சிறுவர்களைப் படைகளில் சேர்த்துக் கொள்வதைத் தடுத்து நிறுத்துவதற்காகவே 'யுனிசெவ்' மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை உகண்டாவில் உள்ள அரசியல் மற்றும் இராணுவப் பயிற்சி முகாமுக்குத் தமது அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதாக 'யுனிசெவ்' அறிவித்துள்ளது.

இந்த முகாமில் இப்போது சுமார் 800 சிறுவர்கள் படைவீரர்களாக உள்ளதாகவும்—

இவர்கள் குடும்பங்களுடன் சேரும் வரை தமது பாதுகாப்பில் இருப்பார்கள் என்றும் 'யுனிசெவ்' மேலும் கூறியுள்ளது.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் பல ஆண்டுகளாகவே அரசபடைகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மோதல் நிகழ்ந்து வருகிறது.

கொங்கோவின் பெரும்பாலான பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள தீவிரவாத அமைப்புக்கு உகண்டா உதவி வருகிறது.

இதற்காகச் சிறுவர்களுக்கு பயிற்சியளித்து தீவிரவாதிகளுக்கு உதவும் படையாக உகண்டா அனுப்பி வருகிறது.

இதேசமயம் கொங்கோ அரசுக்கு உதவும் சிம்பாப்வே, அங்கோலா போன்ற நாடுகளும் கொங்கோ அரசுப் படையில் சேர்க்கப்படும் சிறுவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றன.

இந்த நிலையில் யுத்தத்தில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக 'யுனிசெவ்' அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## கணனி வைரஸை உருவாக்கியவர் கைதானார்

உலகெங்கும் பல இலட்சம் கணனிகளை செயலிழக்க வைத்த 'அனாகோர்னிகா' மின் அஞ்சல் வைரஸ்ஸை உருவாக்கிய 20 வயது நெதர்லாந்து இளைஞர் கைது செய்யப்பட்டார்.

பிரபல டெனிஸ் விளையாட்டு வீராங்கனை அனா கோர்னிகாவின் புகைப்படத்தை மின் அஞ்சல் கோப்புகளில் நிறைந்து விடும் இந்த வைரஸ் கடந்த வார இறுதியில் ஜடைத்தொழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## சிங்கப்பூரில் நன்கொடைக்கு புதிய சட்டம்

சிங்கப்பூரில் தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் 10 ஆயிரம் வெள்ளி அல்லது அதற்கு மேல் நன்கொடை பெற்றால் அதனை அரசுக்குத்தெரிவிக்க வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிங்கப்பூரின் நிரந்தர வாசிகள் தேர்தல் நன்கொடை வழங்குவதை புதிய சட்டம் தடை செய்கிறது.

## 19 கோடி மைலுக்கு அப்பால் விண்கல்லில் இறங்கிய கலம்

ஹானர்ஷூமேக்கர் என்ற விண்கலம் ஈரோஸ் என்ற விண்கல்லில் தரை இறங்கியது.

மனிதனால் உருவாக்கப்பட்ட கலம் ஒன்று விண்வெளியில் உள்ள விண்கல் ஒன்றில் தரையிறங்குவது இதுவே முதல் தடவையாகும்.

பூமியில் இருந்து 19 கோடி 60 லட்சம் மைல்கள் தொலைவில் உள்ள மேற்படி விண்கல் சிறிய கிரகத்தின் அளவுள்ளது. இதில் இறங்கியுள்ள விண்கலத்தில் இருந்து அனுப்பப்படும் சமிக்ஞைகள் பூமியை வந்தடைய நீண்ட காலமாகும்.

இதனால் அவற்றின் அடிப்படையில் ஆய்வுகளை நடத்தப் பல வருடங்கள் ஆகும் என்று கூறப்படுகிறது. (ஒ)

## உலகில் உள்ள நாடுகளை விட அதிநவீன தகவல் தொழில்நுட்பம் ஒசாமா பின்லேடன் கைவசமாம்

வாஷிங்ரன், பெப். 16

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத தகவல் தொழில்நுட்ப வசதி, இஸ்லாமியத் தீவிரவாதத்தலைவர் ஒசாமா பின்லேடனிடம் உள்ளது.

இவ்வாறு அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு அமைப்பின் தலைவர் ஜெனரல் மைக் பேடன் கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு வருடத்தில் உலகம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்துறைக்குச் செலவிடும் தொகையைவிட பின்லேடனின் சொத்துக்களின் மதிப்பு அதிகம் என்றும் பேடன் தெரிவித்தார்.

தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்பு பின்தங்கியுள்ளதாகவும் பேட்டியில் அவர் ஒப்புக்கொண்டார்.

98 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் இரு அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு காரணமான பின்லேடனை தம்மிடம் ஒப்படைக்கும்படி, பின்லேடன் தற்போது வாழ்ந்து வரும் ஆப்கானிஸ்தானிடம் அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. [ஒ]


யா/தேவரையாளி இந்துக் கல்லூரி

நட்சத்திர இரவு

பிற்போடப்பட்டிருந்த மேற்படி நடன நாடக கலை நிகழ்ச்சிகள்

2001 - 02 - 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு

கல்லூரி திறந்தவெளியரங்கில் ஆரம்பமாகும்.

(சி/15328) – பழைய மாணவர் சங்கம்.



I.B.S.

சுண்டிக்குளி & கோயில் வீதி,

★ புதிய அனுமதிகள் 2001

★ தரம் 3 முதல் O/L வரை

★ தனிப்பாட அனுமதிகள்

▼ தமிழ் இலக்கியம் Gr. 10, 11

▼ ஆங்கிலம் Gr. 9,10,11,

▼ வர்த்தகம் Gr. 10, 11.

தரம் 5 புலமைப்பரிசில் விசேட தனிப்பிரிவுகள்

[84198]



சைவ வித்தியா விருத்திச் சங்கம்

ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 2001 — 03 — 18 ஆம் நாள் நடைபெறும். அங்கத்தவர்களைத் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். புதிதாகச் சேர விரும்புவோர் எமது அலுவலகத்தில் உரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சோ. பத்மநாதன்,
செயலாளர்,

கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/15330)

# சிவராத்திரி தினத்தை சமாதான பிரார்த்தனை நாளாக இந்து சமயப் பேரவை பிரகடனம்

## முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் அறிவிப்பு

நெல்லியடி, பெப். 16

எதிர்வரும் சிவராத்திரித் தினத்தை நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கான பிரார்த்தனை நாளாகப் பிரகடனம் செய்ய இந்து சமயப் பேரவை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற முருகன் புகழ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றிய இந்து சமயப் பேரவைச்செயலாளர் சி. சக்திகிரீவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஆதரவில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு விழாவுக்கு யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் வே. வீரபத்திரபிள்ளை தலைமை வகித்தார்.

இந்து சமயப்பேரவைச் செயலாளர் தொடர்ந்து பேசும் போது:-

1985 ஆம் ஆண்டும் அதன் பின்பும் இராணுவ நடவடிக்கைகளினால் சந்நிதி முருகன் ஆலயம் சேதமாக்கப்பட்டு ஆலய வளாகம் மயான பூமியாகக் காட்சியளிக்கின்றது. இதனைப் புனரமைக்க வேண்டிய அவசியத்தை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம். ஆலயம் புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டு வருவதாக எமக்குப் பதில் கிடைத்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் போன்ற இரு ஆலயங்களும், வேறு சில ஆலயங்களும், புனரமைக்கப்பட்டு வருகின்றன. சேதமாக்கப்பட்டிருக்கும் ஆலயங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டால் தான், இந்த நாட்டிலே சாந்தியும் சமாதானமும் உருவாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வின் அவசியம் குறித்து இந்து சமயப் பேரவை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும், பகிரங்கமாக வலியுறுத்தி அறிக்கைவிட்டுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் குழப்ப இந்துக்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள் போரினால் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் கொல்லப்படுகின்றார்கள். சிங்கள அரசியல் தலைவர்களும், பௌத்த மதத் தலைவர்களும் இன்று இதனை உணரத்தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் இதனைக் குழப்ப முனைவோரை மனித நேயம் படைத்த அனைவரும் இரண்டு எதிர்க்க வேண்டும்.

இந்து நிறுவனங்கள் சமூகப் பணியில் மிகுந்த கரிசனையோடு செயல் பட வேண்டிய காலம் இது. தற்பொழுது சில இந்து நிறுவனங்கள் இதனைச் செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியது.

உலகில் எந்த மூலையில் இந்துக்களுக்கு இன்னல் விளைகின்றதோ, அங்கெல்லாம் இந்து சமயப் பேரவை, உதவிகளைச் செய்து வருகின்றது. அண்மையில் கூட குஜராத்தில் இடம் பெற்ற பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது பேரவை ஒருலட்சம் ரூபாவை, வழங்கியுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் என். ஞானகுமாரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார், ஒலிப்பதிவு நாடாவின் முதல் பிரதியை என். குணரத்தினம், எஸ். வசந்தகுமார், த. இராமச்சந்திரன், து. விக்கினேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

(க—109)

## வினா விடை போட்டி

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் யாழ். மாவட்ட பாடசாலைகளின் இன்ரறக்ட் அணிகளுக்கிடையே நடத்தும் வாய்மூல வினா விடைப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பத்துப் பாடசாலை இன்ரறக்ட் அணிகள் பங்குபற்றுகின்றன.

(உ-3)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 16

காரைநகர், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவு செயற்பாட்டறைத் திறப்புவிழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் ஆ. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், திருமதி விக்னேஸ்வரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேசசபைத் தலைவருமான ந. மதனராஜாவும் கலந்து கொள்வர்.

(உ-15)

## கூடைப்பந்தாட்ட அணி தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் அடுத்த மாதம் கொழும்பில் தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ள சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்ட அணி ஒன்று தெரிவு செய்யப்படவுள்ளது.

இந்த அணியைத் தெரிவு செய்வதற்காக 21 வீரர்களை யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அழைத்துள்ளது.

கீழ்வரும் 21 வீரர்களையும் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

எஸ். சிறிகரன், என். சாந்தகுணாகரன், ஏ. அன்ரன் ஜெனிஸ், ஏ. லக்ஸ்மன், எம். றதீஸ்குமார், என். சுதேஷ்குமார், எஸ் றமணன், ஆர். கண்ணா, ரி. எஸ். கிருஷ்ணகுமார், எஸ். விஜயகுமார்.

எஸ். பிரசன்னா, எஸ். திலக், ஏ. எம். நியூட்ரன், எஸ். சசிக்குமார், என். முரளிதரன், என். உதயகுமார், எஸ். ஜே. நிமல்ராஜ், பி. செந்தூர், எஸ். எம். ஜெ ஜெயரஞ்சன், பி. குகராஜ், ஏ. பி. தேவநிமலன்.

## 146 தபால் பொதிகள் கப்பலில் வந்தன

யாழ்ப்பாணம், பெப். 16

காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 146 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த்தபால்கள் அடங்கிய 63 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை—

விமானத்தபால்கள் அடங்கிய 6 தபால் பொதிகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-6-ரி)

## மெய்வன்மை விளையாட்டு வதிவிடப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். வை. எம். சி ஏயின் ஆதரவுடன் மாகாண விளையாட்டு அமைச்சு நடத்தும் மெய்வன்மை வதிவிட பயிற்சி முகாம் இன்று ஆரம்பமாகவுள்ளது

யாழ். வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமினை நடத்துவதற் கென திருகோணமலையிலிருந்து வடக்கு — கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் கே. டபிள்யூ. விமலராஜன் மற்றும் மாகாண மெய்வன்மைத் திட்ட அலுவலர் ஆர். ஆர். றோகான்ராஜசிங்கம் ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

இந்தப் பயிற்சி முகாமில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 40 பயிற்சியாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இந்த பயிற்சி முகாமினைத் தொடர்ந்து உதைபந்தாட்டம் மற்றும் வலைபந்தாட்டப் பயிற்சி முகாம்களும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ—5)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப் 16

சங்கானை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாக இதுவரை காலமும் கடமையாற்றிய என். கிருபாகரன் சுன்னாகம் மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்று தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களை தமக்குத் தெரியப்படுத்தும் படியும் —

கசிப்பு ஒழிப்பில் தமக்கு ஆதரவு வழங்கும்படியும் —

அவர் இப்பிரதேச மக்களை கேட்டுள்ளார்.

(உ-3)

## ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, பெப். 16

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட க. பொ. த. சாதாரணதரத்துக்கான கணித — விஞ்ஞான பாட விசேட செயற்றிட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமக்குரிய கொடுப்பனவு காசோலைகளை வலிகாமம் கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-152

## பரிசளிப்பு

யாழ். மாவட்ட சதுரங்க அணி வீர வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பேராசிரியர் நா. ஞானகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையின் முகாமையாளர் சி. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ். ஜே. ரூபசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சதுரங்கக் கண்காட்சி ஒன்றும் அங்கு இடம்பெறும்.

(உ-3)

## விநியோகம்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் அராலி, வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதிகளில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் சிறார்களுக்கும் சத்துணவான திரிபோஷா மா விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(க-ரி )


## அறிவித்தல்

இல. 136, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும்

### இரட்சிப்பின் சத்தம் சபை

பூரண சுவிசேஷ ஊழியங்களூடாக இன்று முதல் நடைபெறும் ஆசீர்வாதக் கூட்டங்கள்

16-02-2001 காலை யாழ். சபையில் வேதப்படிப்பு

17-02-2001 காலை ,, ,,
மாலை ஜனசக்தி சனசமூக நிலையம் சண்டிலிப்பாயில்

18-02-2001 ஞாயிறு நற்செய்திக் கூட்டம்,
விடுதலை ஆராதனை யாழ். சபையில்

19-02-2001 கரணவாய் நெல்லியடி

20-02-2001 இரட்சிப்பின் சத்தம் சண்டிலிப்பாய்
(காலை வேதப்படிப்பு)
மாலை நற்செய்திக் கூட்டம்
திருநெல்வேலி.

Rev G J. கிலரண்டன்

அவர்களால் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் நடத்தப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

சபை நிர்வாகம்

136, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம் (84245)



யாழ்ப்பாணம்

## தேசிய கல்வியியற் கல்லூரி

பகுதிநேர

## ஆங்கில விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பின்வரும் பாடநெறிகளுக்கு ஆங்கில மொழியில் விரிவுரையாற்றுவதற்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஆங்கிலம்
2. நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

தகைமைகள்;

1. சிறந்த நல்லொழுக்கமுடைய இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருத்தலுடன் தனது பட்டப் படிப்புக்காக ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்றவர்.
அல்லது
ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்.
அத்துடன்
பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சித்திபெற்றவர்.
அல்லது
ஆங்கிலப் பயிற்சியுடன் பட்டம் பெற்றவர்.
அல்லது
தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கற்பித்தல் டிப்ளோமா (ஆங்கிலம்) பட்டம் பெற்றவர்.
3. விண்ணப்பதாரி 01-03-2001 அன்று 50 வயதுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.
4. ஆசிரியர் சேவையில் குறைந்தது 3 வருட அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தனது சுயவிவரத்தினை (Bio-Data)

பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 28-02-2001 அன்று அல்லது அதற்கு முன்னர் உரியமுறையில் அதிபர், வலயக் கல்விப்பணிப்பாளர்களின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

பீடாதிபதி,
யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி.

15-02-2001 (பி/15336)

# சர்வமதக் குழுவினர் ஞாயிறு வன்னி செல்வர்

## பேச்சுக்கான தடைகளை அகற்ற முயற்சிப்பர்

கொழும்பு,பெப்.16

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதிலுள்ள தடைகளை நீக்கும் வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சர்வமதக் குழுவினர் வன்னி புறப்பட்டுச் செல்கின்றனர்.

இந்தக் குழுவில் சகல மதங்களையும் சேர்ந்த மதப் பெரியார்கள் உள்ளடங்கிய 30 பேர் இடம்பெறுகின்றனர்.

சர்வமதப் பெரியார்கள் வன்னி செல்வதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

அதேசமயம் விடுதலைப் புலிகளும் இக் குழுவினர் வன்னிக்குச் செல்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

புலிகளின் மூத்த உறுப்பினர்களான கரிகாலன், தமிழ்ச்செல்வன் ஆகியோரை அண்மையில் வன்னியில் சந்தித்த யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆகிய இருவரும் சர்வமதக் குழுவினர் புலிகளைச் சந்தித்துப் பேசுவதற்கான விருப்பம் தெரிவித்திருப்பது குறித்து அவர்களிடம் கூறினர்.

அதைத் தொடர்ந்தே புலிகள் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக நம்பகமாகத் தெரியவருகின்றது.

சர்வமதக் குழுவினர் கடந்த வருடம் ஜனவரி மாதம் வன்னிக்குச் சென்று புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களான கரிகாலன், தமிழ்ச்செல்வன் ஆகியோரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

அதன்பின்னர் சர்வமதக் குழுவினர் வன்னிக்குச் செல்ல முயற்சிகள் மேற்கொண்ட போதும் பயன் கிட்டவில்லை.

வன்னியில் புலிகளைச் சந்திக்கச் செல்லும் சர்வமதக் குழுவினர் கொழும்பு திரும்பியவுடன் ஜனாதிபதியைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர். (க)

## கலட்டி விநாயகர் ஆலயத் திருட்டு முயற்சி முறியடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்ப்பாணம் கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருட எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழன் அதிகாலை ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இயற்கைக் கடனைக் கழிக்க வெளியே வந்த வீட்டுக்காரர், திருடர்களின் நடமாட்டத்தைக் கண்டு கூக்குரலிட்டதுடன் ஆலய மணியையும் ஒலித்தார்.

அதை அடுத்து திருடர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். (க)


# ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

எதிர்வரும் 19.02.2001 படச்சுருள்களும், வீடியோ கசட்டுகளும்
கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

புலோலி 070-212720 (84234) நல்லூர் 021- 2604





மருத்துவ மாணவர்கள் ஆதரவில்
கண்களில் கனவுகள் தாங்கிய வணங்கள் காணவியலா
"வாழ்வகம்"- கலைஞர்கள் வழங்கும்

# கலை நிகழ்வுகள்

மற்றும்
விழிப்புலன் குறைந்த மாணாக்கருக்கான பாடவிதானம் (Integrated approach) பற்றிய செயல்முறை விளக்கம்.

காலம்: 18-03-2001 ஞாயிறு மு.ப 9.30 (பு.நே.)
இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ்.இந்துக் கல்லூரி.

*கட்புலன் குறைந்த மாணாக்கர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரையும் இந்நிகழ்வில் கலந்து பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*நன்றி*
மருத்துவ மாணவர்கள்.

(C/15333)



இந்துமாமன்றம்
வடமாநிலம்

# இசை அரங்கு

## ராகம் ஒன்று ரசனை மூன்று

இடம்: குமாரசுவாமி மண்டபம், யாழ்.இந்துக் கல்லூரி.
நேரம்: 18-02-2001 ஞாயிறு மாலை 4.00 மணி
தலைவர்: உயர்திரு.அ.சிறிக்குமரன் அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி.

*வயிறு நிறையச் சாப்பிட்டேன் ஆனால் உணவு எரிந்து விட்டது*
*வீட்டுக்குப் போனேன் வீட்டில் பிள்ளைகள் இல்லை எல்லாம் வெளிநாட்டில்*
*அயலவர் ஒருவரும் இல்லை கொழும்பில் அவர்கள் போய்க் கொண்டாட்டம்*
*நான் என்ன செய்வேன்.*

*ஒருசில மணி நேரம் அமைதியாகப் பொழுதைப் போக்குவோம் வாருங்கள் இசை அரங்குக்கு*

பிரவேசம்: ரூபா 30 மட்டும்

(இந்நிதி வறிய மாணவரின் அடிப்படைத் தேவைகளுக்காக செலவிடப்படும்) (84218)


# புலிகளைத் தடை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கையொப்பம் வைத்து இந்த மகஜரை நேற்று அனுப்பியுள்ளனர்.

பிரான்ஸ் மருத்துவக்குழு மூலமாக இந்த மகஜர் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்போர் நீண்டகால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது என்பது தாங்கள் அறிந்ததே. பிரித்தானிய அரசாங்கத்தின் காலனித்துவ ஆட்சியில்இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் தங்கள் அரசு விட்டுச்சென்ற அரசியல் யாப்பானது பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துக்கே சகல அரசியல் அதிகாரங்களையும் வழங்கி நின்றது. இந்த வரலாற்றுப் பின்னணியினால் இலங்கை வாழ் சிறுப்பான்மைச் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளை சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் தீர்மானிக்கின்ற நிலைமை ஏற்பட்டது. தொடர்ந்து ஆட்சிப்பீடத்தில் ஏறிய சிங்களப் பெரும்பான்மைக்கட்சிகள் சிறுபான்மைத் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளான தனித்தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை வழங்க மறுத்ததன் விளைவுதான் இன்று தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்போராகும்.

தமிழ்பேசும் மக்கள் இன ஒடுக்குமுறைக் கொடுமைகளுக்கு எதிராக ஆரம்பத்தில் மேற்கொண்ட அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் சிங்களப் பௌத்த பேரினவாதத்தினால் நசுக்கப்பட்டமையும் அதனால் தமிழ்பேசும் மக்கள் தமது சுய இருப்பையும், சுய கௌரவத்தை நிலைநாட்டவும், தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இன அடக்குமுறைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடவும் ஆயுதமேந்திப் போராட முற்பட்டமையும் வரலாற்றின் நிர்ப்பந்தமே. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப் போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் சிங்கள இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்; பல ஆயிரக் கணக்கானோர் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளனர்; பலர் அங்கவீனர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்; பலர் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர்; பல சிறுவர்கள் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்; பல கோடிக்கணக்கான சொத்துக்கள் நவீன போர்த் தளபாடங்களினால் அழிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாளுக்கு நாள் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ்வாறான இன அடக்குமுறைக் கொடுமைகளினால் தமிழ்பேசும் மக்கள் பாரிய உளவியல் வடுக்களைத் தாங்கியவர்களாகக் காணப்படுகின்றனர்.

இன்று தமிழ்பேசும் மக்கள் அனுபவித்துவரும் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு அரசியல் தீர்வின் மூலம் முற்றுப்புள்ளி வைக்கும் சூழ்நிலை தோன்றியுள்ளது. தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானத்தை ஏற்படுத்தும் நல்ல தொரு சூழ்நிலை தற்பொழுது கனிந்துள்ளது. நோர்வே அரசு மேற்கொண்டிருக்கும் சமாதான முயற்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஆதரவினையும் நல்கி நிற்கின்றனர். நீண்டகாலமாக நீடித்துவரும் இனப்போரினால் தமிழ்பேசும் மக்கள் பாரிய அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்து நிற்கும் இவ்வேளையில் தமிழ்பேசும் மக்களின் தற்போதைய அவா சமாதானமே. எனவே தங்களின் அரசு தமிழ்பேசும் மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் அடக்குமுறைக் கொடுமைகளை நன்கு அறிந்திருப்பீர்கள் என்ற வகையில் தற்போது உருவாகி வரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான சமாதானப் பேச்சுக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

அந்த வகையில் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகப் போராடி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்களது அரசு தடைசெய்ய வேண்டாம் என்று கோருகின்றோம். அவ்வாறு தாங்கள் தடைசெய்யும் பட்சத்தில் தற்போது உருவாகிவரும் சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலை முற்றாகத் தடைப்படும் அபாயம் ஏற்படும் என்பதனாலும், அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்தும் இன அடக்குமுறைக் கொடுமைகளினால் பாரிய இன அழிவைச் சந்திக்க வேண்டிவரும் என்பதனாலும் - மனித உரிமைகளை மிகவும் இறுக்கமாகப் பேணிவரும் தங்கள் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யாது என்ற நம்பிக்கையிலும் யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் ஆகிய நாம் இவ்வேண்டுகோளைத் தங்களின் முன் வைக்கிறோம்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதிபலித்துப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யாது தமிழ் பேசும் மக்களின் நிலையான, நீதியான அரசியல் தீர்வுக்கு தங்கள் அரசு உதவும்படி கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது கையெழுத்துப் பிரதிகளையும் இம் மடலுடன் அனுப்பி வைக்கின்றோம் என உள்ளது (உ-3-6)

# அறிவித்தல்

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த நடராஜா - சிவக்கொழுந்து மகன் ஸ்ரீஸ்கந்தராஜா நாவற்குழியில் இருந்து 14.02.2001 புதன்கிழமை புறப்பட்டு யாழ். நீராவியடியில் சிவகுருநாதர் வீதியில் இருக்கும் மகளுடன் வந்து தங்கியிருப்பதாக உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

*சிவகுருநாதர் வீதி,*
*நீராவியடி.* (C/15338)

தகவல்:
மகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சத்தியதேவி சிவகுமார்

(உயரப்புலம், ஆனைக்கோட்டை.)

கொக்குவில் மேற்கு உயரப்புலத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.சத்தியதேவி நேற்று (15-02-2001) வியாழன் காலை காலமானார்.

அன்னார் சு.சிவகுமாரின் (மருதனார்மடம் பல்லப்பை வயிரவர் ஆலய பரிபாலகர்) அன்பு மனைவியும், நளினி, வதனி (கொக்குவில் இந்துக் கல்லூரி), சாகித்தியன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துக்குமாரசுவாமி (ஓய்வு பெற்ற லிகிதர்), காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அருமை மகளும், பரமேஸ்வரன் **(U.S.A)**, விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), நவசக்தி (சித்திரா-கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உடுவில் கிழக்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் திருமதி சு.அன்னபூரணி ஆகியோரின் அருமை மருமகளும், திருமதி குலரஞ்சிதம் - அரிச்சந்திரன், திருமதி ஜெயரஞ்சிதம்- பரமேஸ்வரன். (ஆஸ்திரேலியா), **Dr.K.S** பாலகுமார் (லண்டன்), திருமதி கலா மகேந்திரன் (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று பூவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (16.02.2001) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.சிவகுமார் (கணவர்)

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (84238)

## தம்பு சரவணமுத்து (வட்டையா)

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கண்டாவளை சந்தையடியில் வசிப்பவருமாகிய தம்பு சரவணமுத்து 11-02-2001 அன்று கண்டாவளையில் காலமானார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராமநாதன் (தபாற் சேவகர்) அன்னலட்சுமி(தங்கம்மா), கிருஷ்ணநாதன்(தபாற் சேவகர்) சந்திரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி, வேலுப்பிள்ளை(அதிபர்), வதனா, சோபா(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் கிரிகரன், கிருபாகரன்(நியூசிலாந்து), கீர்த்திகரன்(கனடா), கீர்த்திகா, கிசோகரன், பிரபாகரன்(யூ.கே), பிரதீபன்(யூ.கே), காலஞ்சென்ற குமுதினி, நிருஜன், பிரசாத், திஸ்சியந்தன், நித்தியா, திவ்வியா(ஜேர்மனி), பிரியங்கா(ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கண்டாவளையில் 12-02-2001 அன்று அடக்கம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.வேலுப்பிள்ளை (மருமகன்)

தற்காலிக முகவரி:
*றோடா இல்லம்,*
*செட்டித்தெரு,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

(C/15337)

நிரந்தர விலாசம்:
*சியாமளா மில் வீதி,*
*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

## திருமதி செல்லையா நாகம்மா

வேலணை தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நகரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகம்மா நேற்று (15-02-2001) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலம் மற்றும் குமாரவேலு (முழங்காவில்), சரஸ்வதி (வவுனியா), திருநாவுக்கரசு (பிரான்ஸ்), யோகாம்பாள் (யாழ்.நகர்), மகேஸ்வரி, செல்வமணி (யாழ்.நகர்), இராமச்சந்திரன் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (சுவிஸ்), விஜயமணி (தயா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலுப்பிள்ளை, தெய்வரத்தினம் (முழங்காவில்), சண்முகலிங்கம் (கொழும்பு), மகேஸ்வரி (பிரான்ஸ்), மரியதாஸ் (யாழ்.நகர்), தர்மலிங்கம், மயில்வாகனம் (யமுனா வாகன உரிமையாளர்), அகிலா (பிரான்ஸ்), தமிழினி (சுவிஸ்), கதிர்காமநாதன் (முழங்காவில்) ஆகியோரின் மாமியாரும், கமலினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-02-2001) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இலக்கம், 32, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
*இல.32, 2ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (84246)

தகவல்:
க.மயில்வாகனம் (மருமகன்)

# அரசியல், பொருளாதார ரீதியில் இலங்கைக்கு நோர்வே உதவும்

## கொழும்பு வந்துள்ள அந்நாட்டு அதிகாரி கூறுகின்றார்

கொழும்பு,பெப்.16

இலங்கைக்கு அரசியல், பொருளாதார ரீதியாக உதவும் அதேநேரம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவும் நோர்வே தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கும் என்று நோர்வேயின் கூட்டுறவு அமைச்சின் இராஜாங்க செயலாளர் சிகரண் மொகடல் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள நோர்வேயின் தூதுக் குழுவுக்கு தலைமை வகித்து வந்துள்ள அவர் நேற்று மாலை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் இப்படித் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையின் அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கு நோர்வே தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கும் நோர்வே, இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதிலும் தனது பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளது.

சகல அரசியல் கட்சிகளும் தமது குறுகிய அரசியல் நோக்கங்களைக் கைவிட்டு இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த முயற்சியில் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம். சமாதான சூழ்நிலை ஏற்பட்டால் மேலும் கூடுதல் உதவிகளையும் வழங்க தயாராக இருக்கின்றோம் - என்றார். (உ-3-10)

# வெளிமாவட்ட இடமாற்றம் பெற்ற 15 பேர் தீவகத்துக்கு!

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட 15 ஆசிரியர்கள் தீவகத்தில் பணி புரிய விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து வெளிமாவட்டங்களுக்கான அவர்களது இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

பிரஸ்தாப 15 ஆசிரியர்களும் தமது நிலைமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கடிதம் எழுதியிருந்ததாகவும் -

அவர் ஆளுநருடன் தொடர்பு கொண்டு இவர்களது இடமாற்றத்தை இரத்துச் செய்துள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்துத் தீவக வலயத்துக்கு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தீவகத்துக்கான இடமாற்றக் கடிதம் இவர்களுக்கு இன்று வழங்கப்படும் என்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

(உ-3-6-ரி)

# ஐரோப்பிய ஒன்றிய எம்.பிக்கள் ஐவர் 22 இல் இங்கு வருவர்

யாழ்ப்பாணம்,பெப்.16

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த- ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய - குழு ஒன்று எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு வரும் அந்தக் குழு அன்று 10 தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் என்றும் -

தொடர்ந்து அரசு, எதிர்க்கட்சி பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வரும் இந்தக்குழு இங்கு அரச அதிகாரிகளுடனும் அரச சார்பற்ற பிரதிநிதிகளுடனும கலந்துரையாடும். (உ-3-10)

## சித்திரவதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதைகள் தொடர்பான ஆவணங்களுடன் வருகை தரல் விரும்பத்தக்கது என்றும் -

குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை சித்திரவதைகள் மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பாக 1996 ஆம் ஆண்டிற்குப் பின் யாழ்நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழககுகளின் நிகழ்ச்சிக் குறிப்பேடுகளை நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பார்வையிட்டனர். (உ-5)

## பிரிட்டனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு உள்ளாகப் போகிறார்கள்.

கடந்த பத்து மாதங்களாகப் படையினர் மேற்கொண்ட பல இராணுவ நடவடிக்கைகளினால் புலிகளுக்குப் பலத்த இழப்புக்களும், பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன. அத்துடன் சர்வதேச ரீதியிலும் அவர்களுக்கு நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இதன் காரணமாகவே அவர்கள் சமாதானப் பேச்சுக்கு முன்வந்துள்ளார்கள். இது சகலருக்கும் தெரிந்த விடயமாகும்.

நேர்மையான முறையில் பேச்சுக்கு வரும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். அதை ஏற்று அவர்கள் பேச்சுக்கு வந்தால் அவர்களுடன் பேசுவோம்- என்றார் அவர். (உ-3)

## மிதிவெடியில் மாது கால் இழப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

எழுதுமட்டுவாழ் பகுதி[illegible] வீடு பார்ககச் சென்ற பெண் ஒரு[illegible] மிதிவெடியில் சிக்கித் தனது வல[illegible]லை இழந்தார்.

நேற்று நண்பகல் 1 மண[illegible]வில் நடைபெற்ற இச் சம்பவத்தில் [illegible]க் குறிச்சி, எழுதுமட்டுவாழில் இருந்து இடம்பெயர்ந்து கலிகை[illegible]நதியில் வசித்து வந்த தம்பையா சரஸ்வதி (வயது 55) என்பவரே காலை இழந்தார்.

வலதுகை மற்றும் காலில் படுகாயமடைந்த நிலையில் மிருசுவில் இராணுவத்தினரால் மீட்கப்பட்ட இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-10-109)

## பிரார்த்தனை

பசுக்களைப் பாதுகாப்பதற்கான விசேட பிரார்த்தனை இன்று காலை 9 மணி முதல் கோப்பாய் தெற்கு பழம்றோட் ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

வடபிராந்திய இந்துப் பேரவை, திருக்குறிப்புத் தொண்டர்சபை, சைவப் புலவர் சங்கம் ஆகியன இணைந்து இந்தப் பிரார்த்தனையை ஏற்பாடு செய்துள்ளன. (உ-3)

# பேச்சு ஆரம்பித்த பின்னரே சம்பள உயர்வுக்கு வாய்ப்பு

## தொழில் அமைச்சர் அலவி கூறுகின்றார்

கொழும்பு,பெப்.16

சமாதானப் பேச்சு ஒன்று ஆரம்பிக்கப்பட்ட பின்னரே அரச ஊழியர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது பற்றி யோசிக்கலாம் என்று தொழில் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

"இன்று நாடு உள்ள நிலையில் சமாதானப் பேச்சு ஒன்று உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே சம்பள உயர்வு போன்ற பிரச்சினைகள் குறித்து யோசிக்கலாம்.

"நாடு மோசமான நிலைக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கு சகலரும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்" - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-10)

## ஜனாதிபதி அடுத்தவாரம் இந்தியாவுக்கு

கொழும்பு,பெப்.16

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

இந்திய - இலங்கை உறவுகளைப் வலுப்படுத்தும் வகையில் இந்த விஜயம் அமையவுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## புலிகள் விவகாரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைமுறைக்குவரும் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்படவேண்டிய இயக்கங்களின் பட்டியலை உள்துறை அமைச்சரே வெளியிடவேண்டும்.

பிரிட்டனில் பல அமைப்புக்கள் இயங்கிவருகின்றன. அவற்றில் விடுதலைப்புலிகளும் ஒன்று. அந்த அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்றும் தடைசெய்ய வேண்டாம் என்றும் பல தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

இது தொடர்பாகக் கொழும்பில் உள்ள தூதரகம் ஊடாகக் கிடைத்த மகஜர்களை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளோம். அங்கு விசேட குழுவொன்று இந்த மகஜர்களை விரிவாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யவேண்டும் என்று இலங்கை அரசு கோரிக்கைவிட்டது போன்று ஏனைய அமைப்புக்கள் தொடர்பாக அந்த அமைப்புக்கள் இயங்கும் நாடுகளும் கோரிக்கை விட்டன.

ஆனால் அந்த நாடுகளில் இருந்து அந்த அமைப்புக்களுக்கு ஆதரவாக எந்தவித மகஜரும் வரவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பல மகஜர்கள் வந்த வண்ணமே உள்ளன. அவை சரியான முறையில் பரிசீலிக்கப்படுகின்றன.

பிரிட்டனில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகச் சட்டம் கொண்டுவந்தோம். அந்தச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளது. எனினும் அந்த இயக்கத்தைத் தடைசெய்யவேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இதற்குள் அந்த அமைப்பு அடங்குவது அந்த அமைப்பின் துரதிஷ்டமே ஆகும் - என்றார் .(உ-3)


## உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு

போட்டோ கொப்பி பிரதி இயந்திரத்துக்கு (Canon & Sharp) தேவையான இயந்திர உதிரிப்பாகங்களையும் மற்றும் Toner என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்

| | |
|---|---|
| Main Motor Wheel | Rs. 2250/= |
| Drum | Rs.2100/= |
| Main Motor (Japan) | Rs.14500/= |
| Toner(Canon NP 215) | Rs.1000/= |
| SharpToner | Rs.2000/= |
| Gear Wheel | Rs.2100/= |
| Exposure Lamp | Rs.1700/= |
| Heater Lamp | Rs.1700/= |
| Upper Clow | Rs.250/= |
| Upper Roller | Rs.3400/= |
| Oil Roller | Rs.1200/= |



P.R. COMMUNICATION
NO.14,Jubilee Bazaar,
Power House Road,
Jaffna.
(C/15332) T.P 021-2008,021-2137



## அந்தியேட்டி அழைப்பு



### நவசிவாயம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஊழியர், யாழ்.மாநகரசபை)

அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த நவசிவாயம் சுப்பிரமணியம் அவர்களின் 41ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் மதியபோசன உபசாரமும் நாளை (17.02.2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
N.S.ரவீந்திரன் (மகன்)
(இலங்கை மின்சார சபை)
மேகாஸ் வீடியோ, அரியாலை.

90, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(C/15325)



SPOKEN ENGLISH
WITH GRAMMAR LECTURES BY:-
MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்:
18-02-2001 ஞாயிறு மாலை 3மணி
SAT SUN 3 p.m. - 4 p.m.
நாவலர்
(84236) ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.



## விற்பனையாகின்றன

1) தமிழ் மூலம் கொம்பியூட்டர் புத்தகங்கள்
2) கொம்பியூட்டர் பரீட்சைக்குதோற்றும் மாணவர்களுக்கான- NCCA-PART - I
3) OMOS - SELECTION புத்தகங்கள்
விற்பனையாகின்றன.

மதீனா புத்தகசாலை
(C/15265)இல. 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



A/L 2003
கணக்கீடு
BALAVASAN
(B.B.A(F.M.Sp))
முதல் பதிவேடுகள்
SAT, SUN → 10-11 A.M
ஆரம்பம்: 17.02.2001→SAT
விக்னா
கல்வி நிறுவனம்
தனிப்பாட அனுமதி உண்டு.
(84230)



எலைற் கல்வி நிறுவனம்
192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
தரம் 5
புலமைப்பரிசில்
2001 புதிய பிரிவு
ஆரம்பம :- 18.02..2001
ஞாயிறு 8.00 a.m
ஒவ்வொரு ஞாயிறும் Bond பரீட்சை காலை 9.00 மணிக்கு நடைபெறும் -நிர்வாகி
(84244)



பௌதிகவியல்
A/L 2003
ஆரம்பம் - 21-02-2001
ஏனைய பிரிவுகளும் நடைபெறுகின்றன
ஆசிரியர்
திரு.சங்கர்
சக்தி கல்வி நிலையம்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.
(84215)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.